www.tamilarangam.net

TAMIL MURASU

# தமிழ் முரசு

முரசு-6 ஒலி-11 ஐப்பசி-கார்த்திகை 1989

## இலங்கை : கொலைக்களம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்ளே: ...............


முரசின் பார்வையில்.......

சாத்தான்களின் வேதம் !

இலங்கை : கொலைக்களம்.

-சூரியன்-

ஜே.வி.பி.. +உமாகாந்தன்+

ஆட்கடத்தலா.....அல்லது படைதிரட்டலா ?

நாடும் நடப்பும். *குமார்*

உலகம்: எமது பார்வையில்....

தொகுப்பு : -சூர்யன்-

இலங்கை — அரசியல் / பொருளாதார — நெருக்குவாரங்க

இலங்கை செய்திகள்.

கருத்து உண்மை — எழுத்து கற்பனை

சந்திப்பு

பிரேமதாசா அத்தலத்முதலி

=தாரன்=




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசின் பார்வையில்......

சர்வகட்சி மகாநாடு,எதிர்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தம் இந்தியப்படை வெளியேற்றம் என்றெல்லாம் பத்திரிகைகள் பெரிய எழுத்துக்களில் முழுங்குகின்றன. ஏதோ எரியும் இலங்கையின் பிரச்சனைகளுக்கு பிரேமதாச அரசு தீர்வு காண உண்மையிலே முயல்வது போன்ற ஒரு மாய வலையை விரிக்கின்றன.ஆனால் அவை அத்தனையும் பொய். கடந்த 12 வருடங்களாக ஆட்சியிலிருந்து நாட்டை நரக மாக்கிய ஐ.தே.க. ஆட்சியாளர்களின் புதிய கண்கட்டு வித்தைதான் இந்த ஏமாற்று நாடகங்கள்.

உண்மையிலே சிறீலங்கா அரசு எந்தப் பிரச்சனையையும் தீர்க்க முயலவில்லை. குறிப்பாக இனப்பிரச்சனை தீர்க்கப்படுவதன் ஒரு அம்சமாக தான் முன்னர் உறுதியளித்த படி மாகாணசபைகளுக்கு அதிகாரப்பகிர்வு செய்ய விரும்பவில்லை.தமிழ் பேசும் மக்களு-க்கு எந்த சிறு உரிமையோ அன்றி சலுகைகளோ வழுங்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்தும் திட்டமிட்டசிங்களக் குடியேற்றங்களை வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நடத்திவரும் இந்த அரசு, வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் புனர்வாழ்வுக்கென வெளிநாடுகள் அளித்த பணத்தை கொடுக்க மறுத்து தான் உண்டு ஏப்பம் விடும் இந்த அரசு... இந்திய அமைதிப்படையை வெளியேற்றி தமிழ் மக்களின் பாதுகாப்பு உத்தரவாதங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடைத்தெறிந்து தனது ஆயுதப்படைகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக்கி மீண்டும் கொக்கட்டிச் சோலை, மண்டைதீவு, வவுனியா, போன்ற கொலைக்களங்களை தமிழ்பிரதேசங்களில் உருவாக்க முயலும் இந்த அரசு.. மின்சாரம் வழுங்குகை மறுப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடு போன்ற திட்டமிட்ட பொருளாதாரத்தடைமுயற்சிகளின் மூலம் எச்சசொச்சமிருக்கும் தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்தையும் நாசம் செய்ய முயலும் இந்த அரசு உண்மையில் இலங்கையின் எந்தப்பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண விரும்பவில்லை.

அடுத்து ஒருவாரத்துக்கான இறக்குமதிகளை செய்வதற்குக் கூட போதுமான பணம் கையில் இல்லாத சிறீலங்கா அரசு தனக்கு கிடைக்கும் சொற்ப ஏற்றுமதிவருமானத்தையும் வாங்கிய கடனுக்கான வட்டிகளுக்கு கொடுக்கவேண்டிய நிலையிலிருக்கும் இந்த அரசு, சர்வதேச நாணய சபை வழுங்க மறுத்த 85 மில்லியன் டொலர்களை நாட்டில் ஓரளவு சுமுகநிலை ஏற்படுகிறது- என சபையை ஏமாற்றி பணத்தைபெறுவதற்கும்,ஜே.வி.பி. புதிதாக மிடுக்கியிருக்கும் அரசுக்கெதிரான வரி கொடாமை மற்றும் சிவில் நிர்வாக அமைப்புக்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றில் இருந்து தப்பிக் கொள்ளவும் ... ஆளும் ஐ.தே.க. வுக்குள் ஏற்பட்டிருக்கும் பதவிக்கான குத்துவெட்டுக்களை மூடி மறைத்து சேடம் இழுக்கும் தனது ஆட்சிக் காலத்தின் இறுதி நாட்களை கொஞ்சம் நீட்டி வைக்க பிரேமதாச ஆடும் சித்து விளையாட்டுக்கள்தான் இவை.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தங்கள் சொந்த நலன்களுக்காக தமிழ்பேசும் மக்களின் நலன்களை காற்றிலே பறக்கவிட்டு சீறிலங்கா இனவாத அரசோடு கைகோர்த்து நிற்கும் எவரும்

www.tamilarangam.net

... தமிழ்பேசும் மக்களின் நலன்களையோ அன்றி பாதுகாப்பையோ சிந்திக்காத எவரும் புரிவது தமிழ்பேசும் மக்களின் வரலாற்றிலேயே மிக மோசமான துரோகமாகும் என்பதையும் பதித்துக் கொள்வோம்.




THE ISLAND

தமிழ் முரசுடனான அனைத்து தொடர்புகளுக்கும்:

The EDITOR,
"Tamil Murasu"
Boite No: 69,
7, rue Racine,
95140 Garges.

www.tamilarangam.net



# இலங்கை : கொலைக்களம்.

திகில் தரும் இரவு, நிசப்தத்தை கணநேரம் கலைத்தது. அந்தத் துப்பாக்கிச் சத்தம் நொடிப்பொழுதிற்கு ஒரு முனகல் மழுகணம் மறுபடி மயான அமைதி. ஒரு மனிதனை எம்-16 துப்பாக்கியால் 30 மீட்டர் தூரத்திலிருந்து தலையைக் குறி பார்த்துச் சுடுகிறார்கள். செத்து வீழ்கிறான் மனித நடமாட்டம் நிறைந்த கொழும்பின் மையஇடமான காலி வீதியில் சடலம் கிடக்கிறது. இரத்த ஓடைகளை தாவிக் கடந்து சடலத்தை துப்பாக்கிமுனையால் குத்தி எடுக்கிறார்கள் இராணுவத்தினர் 'இதையாராவது புகைப்படம் எடுத்தால் ஆம்புலன்சில் அவனையும் பிணமாக ஏற்றுவேன்' - இராணுவ அதிகாரிஉறுமுகிறார்.

அது ஒருபகிரங்க மரண தண்டனை நிறைவேற்றம் போக்குவரத்து ஸ்தம்பித்துப்போக நூற்றுக்கணக்கானவர்கள் வெறித்துப் பார்க்கையில் நடந்த சிரச்சேதம். அந்த மனிதனின் கையில் ஒரு பை இருந்தது. அதில் வெடிகுண்டு இருக்கலாம் என்று இராணுவம் சந்தேகித்தது. முதலில் தோள்புறம் சுட்டார்கள் வலியால் துடி துடித்துக்கிடந்தான். 'சுடு', கொல்லு, உடனே' அதிகாரி கத்த ஒரு இராணுவத்தினன் துப்பாக்கியை இயக்கினான். அந்தே நிமிடத்தில் அங்கே போக்குவரத்துச் சரியாகி சகஜவாழ்க்கை திரும்பியது.

www.tamilarangam.net

ஜே. வி. பி. யின் பயங்கரவாதத்திற்கு பதிலாக சிறீலங்காஅரசபயங்கரவாதம் பலமடங்காக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு நிகழ்த்தப்படும் தேடுதல் வேட்டைகளில் ஆயிரக்கணக்காளோர் கைதுசெய்யப்பட்டு மிக மோசமான சித்தரவதைகளை அனுபவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்களும், இளைஞர்களும் காணுமல் (?) போய்விட்டதாக கணக்கிடப்படுகிறது. இரவு வேளைகளில் இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களில் சாதாரண உடைகளில் வரும் STF எனப்படும் விசேட அதிரடிப் படையினர் ஜே. வி. பி ஆதரவு கிராமங்களை சுற்றிவளைத்து வெறித்தனமாக கொலைகளை நிகழ்த்துகிறது. போதாதற்கு அரசாங்கம் பச்சைப் புலிகள், மஞ்சள் பூனைகள், மக்கள் புரட்சி செம்படை போன்ற கொலைக்குழுக்களை உருவாக்கி அவற்றுக்கு தீனி வழங்கி படுகொலைகளை முடுக்கிவருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்காக நீதிமன்றம் சென்ற மனித உரிமைக்கழக வழக்கறிஞர்களான சரித்தா லங்கபுர, காஞ்சன அபயபால போன்றோரும் இந்த சீருடையற்ற இராணுவக்கூலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் தலைமை வழக்கறிஞர் பிரின்ஸ் குணசேகர தனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்றுகூறி தலைமறைவாகி பின்னர் அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இலங்கை இன்று ஒரு கொலைக்களமாக மாறியிருக்கிறது. குழப்பம் மிகுந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை இன்று வந்துவிட்டது. கடந்த 5 வாரங்களில் 5000 பேருக்கு மேற்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தவருடம் கொல்லப்பட்டவர்கள் இதுவரை 10,000க்கும் மேல். இலங்கை மூன்று மிக மோசமான கொலைக் கும்பல்களின் கையில் சிக்கியிருந்தும் சிந்துகிறது.

நதிகளில் மிதந்து போகும் பிணங்கள், மரங்களில் தொங்கும் மனித உடல்கள் வீதிகளில் தசையும் ரப்பரும் எரிந்தநாற்றம் சூழும் சடலங்கள் - இலங்கையில் இவையெல்லாம் சாதாரணம், என்று ஆகிவிட்டது. மரண தண்டனைகள் பெரும்பாலும் துப்பாக்கியால் சுட்டு நிறைவேற்றப்படுவதில்லை. 'நெக்லெஸ்' என்று கூறப்படும் குரூரமுறை அதாவது கொல்லப்படவேண்டியவரின் கைகளைக்கட்டி கழுத்தில் டயரைமாட்டி மண்ணெண்ணை-யையூற்றிக் கொழுத்துகிறார்கள்.

பொருட்களின் விலையாவும் உயர்ந்து கொண்டு செல்லும் வேளையில் மீனின் விலை குறைந்தது. காரணம் சடலங்களைஉண்டு கொழுத்த மீன்களை யாவரும் வாங்குவதில்லை. துக்கம்கொண்டாடும் சிங்கள மக்கள் தங்கள் வீடுகளில் வெள்ளைக்கொடிகளை ஏற்றுவார்கள். இப்போது வெள்ளைக் கொடிகள் இல்லாத வீடுகளே இல்லை எனும் நிலை வந்துவிட்டது. பழி தீர்ப்பது படுவேகமாக நடக்கிறது குரூரம் தெரிகிறது. கொடுமை நடக்கிறது. இரத்தம் சிதறுகிறது. அப்பாவி மக்கள் பலிக்கடாக்கிறார்கள், கொலைகாரர்கள் காட்டுக்குள் மாயமாய் மறைகிறார்கள். வேலையிலிருந்து விலகுங்கள் இல்லையேல்உங்கள் குடும்பத்தை பூண்டறுப்போம் என்று ஜே.வி.பி சிறீலங்கா இராணுவத்தை எச்சரிக்கிறது. இதற்குப் பதிலடி-யாக பெரிய சுவரொட்டிகளில் 'எமது தரப்பில் ஒரு ஆளை படுகொலை செய்தால் உங்களில் 12 பேரை ஒழிப்போம். -உங்கள் குடும்பத்தவரையும் சேர்த்து" என சிறீலங்காஇரா

www.tamilarangam.net

ணுவம் பதிலடி கொடுக்கிறது.

ஜே.வி.பி செயலில் இறங்கியதும் இராணுவமும் கொலைவெறியாட்டத்தை ஆரம்பித்துவிட்டது. ஒரு சிப்பாய் கொல்லப்பட்டுவிட்டால் சுற்றுப் பகுதியிலுள்ள ஜே.வி.பி.க்கு மிக லேசான ஆதரவாளர்கள் என்று சந்தேகப்படுபவர்களையெல்லாம் இராணுவத்தினர் அள்ளிக்கொண்டு போவார்கள். பின்னர் நதிகளில் மரங்களில் பிணங்களாக சாலைகளில் பாதி , எரிந்த சடலங்களாகத் தான் இவர்கள் கிடைப்பார்கள்தென் பகுதி பொலிஸ் நிலையவளவுகளில் ஏராளமான பழைய டயர்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பதன் காரணம் இதுவே.

நாட்டில் நீதியை, ஒழுங்கை, பாதுகாக்கவேண்டிய அரசே கொலை வெறியாட்டங்களை கட்டவிழ்க்கிறது. இரத்தத்துக்கு இரத்தம் கொலைக்கு கொலை இதுவே இன்று எங்கும் தாண்டவமாடுகிறது. கொலைக்களமாகிவிட்ட இந்த தேசத்தில்வாழும் மக்களுக்கோ இன்று இரவு வந்தால் பயம். காரணம் அது ஒரு கேள்வியைக் கொண்டுவருகிறது. காலையில் உயிரோடு இருப்போமா? பகல் நேரமோ வேலை நிறுத்தம் காரணமாக வீட்டில் இருக்க வேண்டிய கட்டாயம் மீறி வெளியே புறப்பட்டால் உயிருக்குத் ஆபத்து.

இந்தக் கொலைக் களத்தில் மக்கள் எண்ணிக் கொண்டிருப்பது எதிர்காலம் குறித்த கனவுகளை அல்ல வீழ்ந்து கொண்டிருக்கும்பிணங்களையும் வாழப்போகும் நாட்களையும் தான்.

'இந்தியா டுடே'க்கு நன்றியுடன் **-சூரியன்-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாத்தான்களின் வேதம் !

அன்புள் ள நண்பர்களே !
உங்களில் இப்போது நிறைய மாற்றமாம்
நீங்கள் இப்போது ஞானஸ்தானம் எடுத்துவிட்டீர்களாம்
அராஜகத்துக்கு எதிராக .........
பெண்களின் உரிமைக்காக .......
ஜனநாயகத்துக்காக எல்லாம் ...
இப்போது நீங்கள் உரத்து குரல் கொடுக்கிறீர்களாம்.
ஆனால் எனக்கு என்னவோ
நம்புவதற்கு கொஞ்சம் கடினமாகத்தானிருக்கிறது
ஏனென்றால் ......
அராஜகம் உச்சக்கட்டத்திலிருந்தபோது
உட்கொலைகள் மலிந்து
புதைகுழிகளும்......"டம்பிங்குகளும்"
புகழ் பெற்ற காலங்களில்
சுழிபுரங்களும்......சவுக்கம்தோப்புகளும்
எழுந்து நின்ற வேளைகளில் -நீங்கள்
பெரியவரின் புகழ்பாடியதை
அடக்கு முறைக்கு துணை போனதை
மறப்பதற்கு மனது சங்கடப்படுகிறது.
இப்போது என்னவோ
உங்கள் கச்சேரிகளுக்கு
அரங்கம் தேவை-அதனால்
மடங்களை அடிக்கடி மாற்றுகிறீர்கள்
மார்க்கிச மகுடம் சூடுகிறீர்கள்
ஆனால் நண்பர்களே
ஒரு விடயத்தை மறந்து விட்டீர்கள்
நீண்ட தூக்கத்தில்
உங்கள் கனவுகள்
அழகாயிருந்தாலும்
மக்கள் விழிக்க ஆரம்பித்துவிட்டார்கள் .
சாத்தான்கள் வேதம் ஓதுவதை - அவர்கள்
சகித்துக் கொள்ளமாட்டார்கள்.

-அர்ச்சுனன்-

www.tamilarangam.net

# இலங்கை செய்திகள்.

வட_கிழக்கு_பாதுகாப்புக்கு_தெளிவான_ஏற்பாடு_இல்லை-_வ.கிழக்கு_முதல்வர்

புதிய இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாந்தான போதிலும் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் வடக்கு-கிழக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பாக தெளிவான கருத்துக்கள், எதுவும் தெரிவிக்கப்படவில்லை. என வடக்குகிழக்கு மாகாண முதல்வர் திரு.வரதராஜ' பெருமாள் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண நிரந்தர பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில்30 30 ஆயிரம் தமிழ் பேசும் மக்களை இராணுவ-பொலிஸ் படைகளில் சேர்த்துக்கொள்வதன் மூலமே தமிழ் மக்களின் எதிர்காலப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். என அவர் கூறியுள்ளார். அவர் மேலும் கருத்துதெரிவிக்கையில் டிசம்பர் 31ம் திகதிக்குமுன்னர் இந்தியப் படைகள் வடக்கு கிழக்கைவிட்டு வெளியேறினல் ஏற்படும் பாதுகாப்பு இடைவெளியை யார் நிரப்புவது என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தியப் படைவெளியேறும் நிலையில் இலங்கைப் படை வடக்கு கிழக்கிற்கு வருமானல் 1983,87 ஆண்டுச் சம்பவங்களே மீண்டும் இடம்பெறும் என நாம் எதிர்பார்க்கமுடியு' யும். வடக்குகிழக்கின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இலங்கைஅரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கத் தவறினல் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை சிங்களவர்களுக்கு பலியாக்கும் செயலாகவே அமையும்.

புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து ஜனநாயக ரீதியான முழுமையான செயற்பாட்டுக்கு வந்தால் முதல்வர் பதவியைக் கூட விட்டுக்கொடுக்க நாம் தயார். ஒரு தேர்தலை எதிர் கொள்ளவும் நாம் தயார் என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

(வீரகேசரி29.9.89)

அதிகரித்துச்_செல்லும்_இலங்கையின்_கடன்-

ஆளும் ஐ.தே.கயினரின் குருட்டுத்தனமான பொருளாதாரக் கொள்கைகள் இலங்கையை மீளமுடியாத கடன் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. 1989ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்துவெ' ளிநாட்டிற்கு ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் 13ஆயிரம் ரூபா கடன்பட்டுள்ளதுபோல இலங்கை அரசு வெளிநாடுகளுக்கு கொடுக்கவேண்டிய கடன்உள்ளது. மொத்த வெளிநா' ட்டு உள்நாட்டுக் கடன் முறையே 221,917 மில்லியன் ரூபாய் எனவும் உள்ளூர் கடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

98,780 மில்லியன் ரூபாவுக்கு மேலாக உள்ளதென்றும் அதேசமயம் சர்வதேச நாண யசபை மற்றும் வெளிநாட்டு வட்டாரங்களில் இருந்தும் பெறப்பட்ட கடன் முறையே – 123,130 மில்லியன் ரூபா எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இலங்கை ரூபாவின் பெறுமதியும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

## தியாகம், சமாதானம், சக்தியை உணர்த்தும் வடக்கு-கிழக்கு மாகாணக் கொடியை முதல்வர் ஏற்றிவைத்தார்

வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் எண்ணங்களையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் சின்னமே மாகாணத்தின் மூவர்ணக் கொடியாகும் கொடியின் இடப் பகுதியிலுள்ள சிவப்பு நிறத்திலான பட்டியின் சிவப்பு நிறம் மக்களின் தியாகங்களைப் பிரதிபலிப்பதாகும் . கொடியின் மத்தியிலுள்ள வெண்மை நிறப்பட்டியின் வெண்மைநிறம் மக்கள் நாடி நிற்கும் அமைதியைக் குறிக்கும் வலப்பகுதியிலுள்ள பச்சைநிறப்பட்டியிலுள்ள பச்சைநிறம் மாகாண எதிர் நோக்கியுள்ள செழிப்பான வாழ்வைக் குறிக்கும் . வெண்ணிறப்பட்டியின்மத்தியில் 24 சுவாலைகளைக் கொண்ட சக்திக் கோளம் பிரகாசிக்கின்றது. "சக்திக்கோளத்தின் நடுப் பகுதி செம்பீத நிறமானது. அப்பகுதியை சுற்றியுள்ள வளையம் கடும் மஞ்சள்நிற மானது. சுவாலை விட்டெரியும் சக்திக் கோளம் மக்களின் அரசியல் அதிகாரத்தையும் மனித வலுவையும் ஒருங்கிணைத்த வகையில் மக்கள் சக்தியைக் குறிக்கிறது. தியாகத்தின் அடிப்படையில் சமாதானத்தின் ஊடாக சக்தியுடன் சுபீட்சத்தை நோக்கி முன்னேறுவோ மென்பதையே இக்கொடி உணர்த்தி நிற்கிறது. இக்கொடியை வட-கிழக்கு மாகாண முதல்வர் திருமலையில் ஏற்றிவைத்தார். மாகாண அரசியல் இணைப்பாளர்கள் இதரமாவட்டங்களில் ஏற்றிவைத்தனர்.

## பாதிக்கப்பட்ட காகித ஆலை ஊழியருக்கு நிவாரணம் வழங்குக ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை

சிதறிக்கிடந்த ஈழத்தொழிலாளர்களை இணைத்து நசுக்கப்பட்ட அவர்களின் உரிமைக்குரல்களை விடுவித்து அவர்களது கோரிக்கைகளை உரத்த குரலில் எழுப்பும் ஒரே அமைப்பாய், இன்று ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 1985ம் ஆண்டு ஏப்பிறல், மே. யூன் மாத வன்செயல்களின்போது பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை காகித ஆலை ஊழியர்களுக்கு அரசு வழங்குவதாக உறுதியளித்த நிவாரணத்தை உடன் வழங்குமாறு கோரி ஈழத் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் தோழர் வி.ஏ கந்தசாமி அரசைக் கோரியுள்ளார்.

www.tamilarangam.net

தமிழ் மக்களின் எதிர்ப்பு மேலும் வளரும் நவசமசமாஜக் கட்சி

அரசு அதிகாரப் பரவலாக்கலை மாகாண மட்டத்தில் ஒழுங்காக செய்யாத செயல் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பை மேலும் வளர்த்துக்கொள்ளவே முயல்கிறது என நவசமசமாஜக்கட்சி தனது அறிக்கையில் கூறியுள்ளது. அரசியலமைப்பின் 13வது திருத்தப்படி அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்காததன் மூலம் குறிப்பாக வட-கிழக்கு-தமிழ் பேசும் மக்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது. அரசின் இச்செயல் தேவையற்ற இந்தியத் தலையீட்டையும் தமிழ் மக்கள் மீண்டும் எதிர்ப்புக் குரல் எழுப்புவதும் ஏதுவும் வழிசெய்யும் என்று இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் 75 பல்கலைக்கழக மாணவர்கள் காணவில்லை

தென்னிலங்கையில் 75 பல்கலைக் கழக மாணவர்கள் காணாமல் போயுள்ளனர், என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கைவிடுத்துள்ளது. கொழும்பு பல்கலைக்கழகம்-8, பேராதனை-15, மொரட்டுவை-12, வித்தியாலங்கார-14, சிறிஜெயவர்த்தனபுர-6, பௌத்தபாலி-5, மொத்தம் 75 மாணவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் 87 பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஒன்றிய அறிக்கை கூறியுள்ளது.

நோர்வேயில் புலிகள் காடைத்தனம்

நோர்வே -ஒஸ்லோ நகரில் உள்ள பல்கலைக்கழக மாணவர் விடுதியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ்இன் யாழ்.மாவட்ட எம்.பி திரு.பிரேமச்சந்திரன் மத்திய குழு உறுப்பினர்கள் தோழர்கள் கேதீஸ்வரன், சாந்தன் ஆகியோர் புலிகளின் நோர்வே குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர். சர்வதேச காடைத்தனத்துக்கு பேர்போன இப்புலிக் குழுவில் அஞ்சலோ, பிரதீப்ராஜ், விமலராஜ், சத்தியா, அருணன், ராஜன், உட்பட பலர் அடங்குவர். இவர்களில் சிலரை பொலிசார் கைதுசெய்ததுடன் இவர்களுக்கெதிரான கண்டனங்களையும் நோர்வே பத்திரிகைகளும், அமைப்புக்களும்எழுப்பியுள்ளன. நோர்வேயில் புலிகள் தவிர்ந்த வேறு எந்த அமைப்பும் கூட்டம் வைக்கக்கூடாது என்ற புலிகளின் கூற்று வன்மையாக கண்டிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் தொடரும் வன்செயல்கள்

சிறீலங்கா அரசும் ஜே.வி.பியும் போட்டி போட்டுக்கொண்டு நிகழ்த்திவரும் வன்செயல்கள் தென்னிலங்கையில் தொடர்ந்தும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. அரச அறிக்கையின்படி கடந்த ஒரு மாதத்தில் 678 அரச கட்டடங்கள் தீவிரவாதிகளால்தீ வைக்கப்பட்டதாயும் 52 பஸ்கள் நாசப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. அரச அறிக்கை கடந்த மாதத்தில் நடந்த கொலைகள் 900 எனபட்டியல் போட்டபோதும் இது 2700 வரை இருக்கலாம் என பத்திரிகைகள் கூறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கொலைகளில் இலங்கை சாதனை

உலகிலேயே இப்போது சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப மிக அதிகப்படியான கொலைகள் இலங்கையிலேயே இடம்பெறுகிறது என்று லண்டனில் இருந்து வெளிவரும் தி. எக் கொனமிஸ்ற் சஞ்சிகை ஆய்வின் மூலம் வெளியிட்டுள்ளது. 1இலட்சத்துக்கு 100பேர் என்ற ரீதியில் அதாவது சனத்தொகை அடிப்படையில் 0.1, வீதம் கொலைகள் அண்மை1 யில் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடம் பஞ்சாப்பில் இடம்பெற்ற கொலைகளின் சராசரி விகிதத்தைவிட இலங் கைக் கொலைகள் எட்டுமடங்கு அதிகமானவையாம்.

## அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்பு பொறுப்பு மக்கள் தொண்டர் படையிடம்

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படைகள் விலகியதையடுத்து மேற்படி மாவட்டத் தின் பாதுகாப்பு மக்கள் தொண்டர் படையிடம் வழங்கப்பட்டுள்ளது. இப்படைகளை இ இயக்கும் பொறுப்பு வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரிடம் உள்ளது. அதேசமயம்தொ ண்டர் படையின் தற்போதைய எண்ணிக்கையான 3ஆயிரத்தை 7ஆயிரமாக அதிகரிக்கும் நடவடிக்கையில் மாகாணசபை ஈடுபட்டுள்ளது.

## புலிகள் போடும் புது வேசம்

வடக்கு-கிழக்கு மாகாண பொலிஸ் படையில் தாம் சேரத்தயார் எனவும் இதர குழுக் களும் சேரட்டும் என்றும் சுதந்திரமான தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள புலிகள் தயார் என்றும் தாம் தேர்தலில் வெற்றிபெற்றால் ஈ.பி.ஆர்.எல்.எவ் யை அணைக்கத் தயார் என்றும் அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களுடன் ஒத்துழைக்கவிரும்புவதாகவும், புலிகளின் அரசியல் சித்தவித்தகர் பாலசிங்கம் அறிக்கை விடுத்துள்ளார். இலங்கையில் இப்படி சமாதான வேசம் போடும் புலிகள் வெளிநாடுகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறு ப்பினர்கள் மீது தாக்குதல், ஆட்கடத்தல், கொலைமிரட்டல், ஈஆகிய நடவடி- காடைத்த னங்களில் மூர்க்கமாக ஈடுபட்டுள்ளனர்.

## வடக்கு-கிழக்கில் ஆள் கடத்தல்
## கப்பம் திரட்டுவதில் புலிகள் தீவிரம்

சிங்கள இனவாத அரசுக்கு நேசக்கரம் நீட்டி கூடிக் குலவும் புலிகள் தமிழ் பகுதிகளி ளில் வர்த்தகர்களையும், சமூக சேவையாளர்களையும் கடத்தி பெருந்தொகையான பணத்தை கப்பமாகத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியாவுடனான போர் நிறுத் தக் காலத்தைப் பயன்படுத்தி இச்செயல்களில் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இவ்வகையில் மட்டக்களப்பு பகுதியில் 20 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர். முன்னை நாள் மேயர் அம்பலவாணரைக் கடத்திய புலிகள் அவரை விடுதலை செய்ய 50 இலட்சம்ருப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரூபாவை கப்பமாக கோரியுள்ளனர். யாழ்ப்பாண வர்தகர் குமாரசாமியிடம் 40இலட்சம் ரூபாவும் வர்த்தகர் சிவகடாச்சத்திடம் 1கோடி ரூபாவும் கோரப்பட்டுள்ளது. அராஜுக்த்தைப்பற்றி வாய் கிழியப் பேசுபவர்கள் இந்த அராஜுகத்தை குறித்து வாய் மூடியிருப்பதன் மர்மம் என்ன?

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு வெளிநாடுகள் பெருந்தொகை நிதி உதவி

இவ்வருடம் அக்டோபர் மாதம் வரை 18 சர்வதேச அமைப்புக்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் புனர்வாழ்வுப் பணிகளுக்கும் 1இலட்சத்து 69ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. ஆசிய அபிவிருத்திவங்கி 2124மில்லியன் ரூபா, அவுஸ்ரேலியா 19மில்லியன் ரூபா, கனடா512மில்லியன் ரூபா, டென்மார்க்1557 மில்லியன் ரூபா, ஐ.நா பொருளாதார சமூகம்500மில்லியன் ரூபா, ஜேர்மன் சமஸ்டிக்குடியரசு 198 மில்லியன் ரூபா, சர்வதேச அபிவிருத்திச்சபை 3338ரூபா, இந்தியா800 மில்லியன் ரூபா, ஜப்பான் 652மில்லியன் ரூபா, நெதர்லாந்து 652மில்லியன் ரூபா, நோர்வே 453 மில்லியன் ரூபா, சுவீடன் 216 மில்லியன் ரூபா, சுவிட்சலாந்து 290 மில்லியன் ரூபா, ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயம் 452 மில்லியன் ரூபா, இங்கிலாந்து 792 மில்லியன் ரூபா, அமெரிக்கா 3000மில்லியன் ரூபா, உலக உணவுத்திட்ட நிறுவனம் 110 மில்லியன் ரூபா, என்ற முறையில் வழங்கத் தீர்மானித்துள்ளதாக தகவல்திணைக்களகத் தெரிவித்துள்ளது.

அதே சமயம் இலங்கையின் தென்பகுதியிலிருந்து பிரித்தானியா, ஜேர்மன் அமைப்புக்கள் தம்மால் இப்பகுதியில் தொடர்ந்து பணியாற்றமுடியாது என்று தெ[illegible] வெளியேறியுள்ளன

* தமிழீழமே தமது தாகம் என கோசம் போட்ட புலிகள் தற்போது வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டால் தாம் புதிய தேர்தலுக்கு தயார் என அறிவித்துள்ளன.

* வட-கிழக்கு மாகாண விவசாயக் கல்லூரிகள் பயிற்சி வகுப்பு வவுனியாவில் ஆரம்பமாகியுள்ளது. வடக்கு-கிழக்கு விவசாயப் பணிப்பாளர் டாக்டர்.என்.விக்னராஜா இதை ஆரம்பித்துவைத்தார்.

* தாளமுடியாத நெருக்குவாரத்தால் தவிக்கும் ஐ.தே.க அரசுக்கு தேவைப்படின் அரசைக் கலைத்து தேர்தல் நடத்துமாறு ஐ.தே.கட்சி செயற்குழு சிபாரிசு செய்துள்ளது.

* பிரிட்டன், அமெரிக்கா, இத்தாலி கனடா, நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கிய வெளிநாட்டு இராணுவக் குழுவொன்று 'சிறீலங்கா பதில் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துள்ளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தன்னரசகளிலிருந்து நாட்டைவிடுவிப்பதும், மாகாண சபையைக் கலைப்பதும் தனது நோக்கம் என ஜே.வி.பி அறிக்கை விடுத்துள்ளது.

* திருமலையில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடிஅரசு அபிவிருத்தித்திட்டத்தினூடாக சேவை புரிந்துவந்த டாக்டர் ஞானசேகரன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார். இவரை விடுவிக்கும்படி பல்வேறு அமைப்புக்களும் கோரியுள்ளன.

* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது கல்விச் சேவையில் நூறு ஆண்டுகளைக் கண்டுள்ளது.

* யாழ் மாவட்டத்தில் முறைசாராக் கல்விப் பிரிவு மிகச் சிறந்த முறையில் செயற்பட்டுவருவதால் இப்பிரிவுக்கு ஐ.நா.உயர் ஸ்தானிகராலயம் தொடர்ந்து உதவும் என மேற்படி ஸ்தானிகராலய செயற்திட்ட அதிகாரி திரு.டானியல்வெயரிஸ்ராயாழ் தொழில் நுட்ப கல்வி வள திறப்புவிழாவில் கலந்து கொண்டு கூறியுள்ளார். இந்நிலையம் நல்லூரில் 55இலட்சம் ரூபாவில் அமைக்கப்படவிருக்கிறது.

* தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டதிரு. அமிர்தலிங்கத்தின் இடத்துக்கு திரு.மாவை சேனாதிராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

* வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஓர் ஆண்டு பூர்த்தியையொட்டி மாகாண தகவல் திணைக்களகம் தமிழ்-சிங்கள கட்டுரைப் போட்டியை மாணவர் மத்தியில் நடத்தவுள்ளது.

* ஈழத்து நூல்,சஞ்சிகை,ஓவிய ,சிற்ப கண்காட்சியொன்று யாழ்.இந்துக் கல்லூரியில் 28,29ம் திகதிகளில் நடைபெற்றுள்ளது.

* பேராதனை பல்கலைக் கழகத்தில் கடமையாற்றியபோது உடற்கூற்றியல் திணைக்களகத் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த டாக்டர்.வி.நவரத்தினத்தின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவர் இப்போது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உடற்கூற்றியல் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

* முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியு தமது 76 வயதில் காலமானார். தமிழ் பேசும் மக்களுக்கெதிரான பல நடவடிக்கைகளை இவர் முன்னின்று நடத்தியவராகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை

# அரசியல் - பொருளாதார நெருக்குவாரங்கள்

கடந்த காலங்களில் முன்னெப்போதும் இல்லாத மிகமோசமான அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குள் இலங்கை சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது. 12 வருட கால ஐ.தே.க ஆட்சியாளர்களும் அதற்கு முன்னைய சிங்கள இனவாத ஆட்சியாளர்களும் நடத்திய சுரண்டல்களும், அரசியல்பித்தலாட்டங்களும் இலங்கையை இந்நிலைக்கு தள்ளியுள்ளன. இன்று உலகில் அதிக குழப்பங்கள் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை கருதப்படுகிறது.

இன்றைய பிரேமதாசா அரசு பல முனைகளிலுமிருந்து அரசியல் நெருக்கடிகளுக்குள் உள்ளாகியுள்ளது. ஜே.வி.பி ஆனது ஐ.தே.கட்சியினர் மீதான தனது துப்பாக்கி நெருக்குவாரத்தை மிகத் தீவிரமாக்கியுள்ளது. ஜே.வி.பியின் கொலைப்பட்டியலில் கொல்லப்பட்ட ஐ.தே.க உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே இரண்டாயிரத்தைக் கடந்துவிட்டது. ஆளும் ஐ.தே.கட்சியில் இருந்தால் சுரண்டிக் கொழுக்கலாம் அல்லது வசதிகளை அனுபவிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று ஐ.தே.க யுடனான தொடர்புகளை அறுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏன் பல அமைச்சர்களே நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் தங்கள் உயிர்வாழ்

www.tamilarangam.net

கையை நீடிப்பதற்காக தங்கள் பிள்ளைகளை ஜே.வி.பி ஆதரவாளர்களாக மாறச் செய்து தமக்கான பாதுகாப்பு கவசங்களை அமைக்க முயல்கிறார்கள்.

இத்தகைய பீதி ஐ.தே.கவை ஒருபுறமாக சிதைக்கிறது என்றால் கட்சிக்குள் கிளம்பியிருக்கும் உட்பூசல்கள் ஐ.தே.கவை உள்ளுக்குள் கூறுபோட்டுக் கொண்டிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவுக்கெதிரான தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவின் கருத்துக்களும், ஜே.ஆரின் நடவடிக்கைகள் குறித்த பிரேமதாசாவின் கண்டனங்களும் உட்கட்சிப் பிரச்சனைகள் ஒரு புரையோடிப்போன புண் என்பதையே காட்டுகின்றன.

தனக்கெதிராக குரல் கொடுப்பவர்கள் தனது அமைச்சரவையில் நீடிக்கமுடியாது என்ற பிரேமதாசாவின் எச்சரிக்கையையும் மீறி பிரேமதாசாவினால் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டு வந்த காமினி திசநாயக்கா, லலித் அத்துலத்முதலி போன்றவர்கள் பகிரங்க அறிக்கைகள் மூலம் ஜனாதிபதியுடன் மோத ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே இந்தியப்படைவெளியேற்றம் தொடர்பாக ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தவறானவை என பல அனுபவமிக்க அமைச்சர்கள் விமர்சித்துள்ளனர். அதுபோல வேபுலிகளுடனான ஜனாதிபதியின் உறவும் மிக கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. அதேசமயம் வடக்குகிழக்கு மாகாணஅரசு தொடர்பாக ஜனாதிபதி கொண்டிருக்கும் எதிர்ப்பு அணுகுமுறையும் பல முக்கிய அமைச்சர்களின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக தொண்டமான், காமினி திசநாயக்க போன்றவர்கள் இவ்வணுகுமுறையை கடுமையாக விமர்சித்துள்ளனர்.

www.tamilarangam.net

இது இவ்வாறு இருக்க ஜனாதிபதி முறையையே மாற்றவேண்டும் மீண்டும் பிரதமர் அமைப்பு முறையைக் கொண்டுவந்து ஜனாதிப தியிடமிருக்கும் சர்வ உரிமைகளையும் பிடுங்கவேண்டும் என்றும் அமைச்சர்கள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர். இது குறித்து தான் நீதிமன்றத்தில் முறையீடு செய்யக்கூட தயாராக இருப் பதாக அத்துலத்முதலி கூறியுள்ளார். அத்துடன் அரசியல் சா சனதிருத்தம் பற்றி பரிசீலிக்க வேளைவந்துவிட்டது என்றுமறை முகமாக் பிரேமதாசா பதவி விலக வேண்டியதை சுட்டியும் காட்டியுள்ளார். இன்று அமைச்சரவையிலுள்ள பலர் ஜே.வி பியின் துப்பாக்கிக்குண்டுகளிலிருந்து தப்புவதற்கான பாதுகாப் பைப்பெறுவதற்காகவே ஐ.தே.கயுடன் ஒட்டியுள்ளனர்.

அதேசமயம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மக்கள்ஐக் கிய முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய எதிர்கட்சிகளின் கூட்ட ணியும் அரசாங்கம் பதவி விலக வேண்டும். அனைத்துக் கட்சி களையும் கொண்ட இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டு மென்ற கோரிக்கையை வற்புறுத்த ஆரம்பித்துள்ளது. இது குறித்து நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசு தேவநாணய கார குறிப்பிடும்போது மேலும் ஒருவாரம் கூட இந்த நாட் டைஆளும் தகுதியை இந்த அரசு இழந்துவிட்டது வெகு ஜன ஆதரவு இல்லாத இந்த அரசால் இலங்கைக்கு ஒரு லாபமும் இல்லை. அராஜகம் தாண்டவமாடுகிறது. ஆட்சி அடியோடுநி லைகுலைந்துவிட்டது. அதனால் இந்த அரசு உடனடியாக பதவி விலகவேண்டும் என்று கூறுகிறார்.

இது குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் - யாழ். மாவட்ட உறுப்பினர் பிரேமச்சந்திரன் குறிப்பிடும்போது

www.tamilarangam.net

தெற்குப் பிரச்சனைகளை அரசாங்கம் இராணுவ அணுகுமுறையுடன் அணுகுவதை வன்மையாகக் கண்டித்ததுடன் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்காமல் அதை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டு இப்போது இடம்பெறுகின்ற வன்முறைகளை மாத்திரம் குறைத்துவிட்டால் அது பகற்கனவாகவே இருக்கும் எனக் கூறுகிறார்.

அத்துடன் புலிகள் பிரேமதாசாவுடன் சமரசம் செய்ததுபோலல்லாமல் ஜே.வி.பி பிரேமதாசாவின் பேச்சுவார்த்தை அழைப்புக்களையும் போர் நிறுத்தத்தையும் நிராகரித்ததும், மேலும் ஒரு அரசியல் நெருக்குவாரத்தை ஐ.தே.க அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் நெருக்குவாரம் இந்தவகையில் என்றால் பொருளாதார நெருக்குவாரம் இதைவிட மிக மோசமாகவுள்ளது. இலங்கையின் பொருளாதார முதுகெலும்பு உடைந்துவிட்டது. பணவீக்கம் 20வீதத்தை தாண்டிச் செல்கிறது. இலங்கை ரூபாயின்மதிப்பு தொடர்ந்து தாழ்ந்து போகிறது. மேலும் இதைக் குறைக்கும்படி சர்வதேச நாணயசபை நிர்ப்பந்திக்கிறது. தேயிலை, போன்ற முக்கிய ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதார அஸ்தமனம் குறித்து காமினி திசநாயக்கா குறிப்பிடும்போது எங்களை அழிக்க இந்திய இராணுவம் தேவையில்லை. தேயிலையின் சர்வதேச விலையில் ஒரு ரூபாய் அளவுக்கு மாற்றம் ஏற்பட இந்தியா வழி செய்துவிட்டாலேபோதும் – நாம் தொலைந்தோம் என்கிறார்.

www.tamilarangam.net

நாட்டின் வெளிநாட்டுக் கடனும் கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டியின் தொகையும் அதிகரித்துச் செல்கிறது. உற்பத்தி வளர்ச்சி விகிதம் விரைவில் பூச்சியத்திற்கு வந்துவிடலாம். இலட்சக்கணக்கிலிருந்த உல்லாசப் பிரயாணிகளின் வருகை ஆயிரங்களாகிவிட்டது. இதனால் பயணிகள் விடுதிகள் வெறிச்சோடுகின்றன. இந்தத் துறையே சூன்யமாகிக் கொண்டு இருக்கிறது.. துறைமுகங்களில் வேலை இல்லை. தொழிற்சாலைகளில் வேலை இல்லை, போக்குவரத்துவசதிகள் இல்லை. இவை எல்லாமே பொருளாதார சவப்பெட்டிக்கு ஆணிகளை இறுக்குகின்றன.

அன்றாட வாழ்க்கைச் சீர்குலைவும் அதிகரித்துவரும் வேலையில்லாப் பிரச்சனையும் அரசின் மீது நம்பிக்கையிழந்த சிந்தனையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஜே.வி.பியை நோக்கித் தள்ளுகிறது. அதேசமயம் அரசின் பொருளாதார நிலைகளுக்கெதிரான (தேயிலை தோட்டங்கள், தொழிற்சாலைகள், பஸ்கள், அரச அலுவலகங்கள், மின்சாரநிலையங்கள்) ஜே.வி.பியின் தாக்குதல்களும், வரிப்போடா வேண்டுகோள்களும் இலங்கைப் பொருளாதாரத்தின் இறுதி அத்தியாயங்களை எழுது-கின்றன.

செல்வந்தர்களுக்காக செல்வந்தர்களால் அமைக்கப்பட்ட ஐ.தே.க அரசும் அதன் திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் இன்று மீளமுடியாத ஒரு பொருளாதாரப் படுகுழியில் மக்களையும் நாட்டையும் தள்ளிவிட்டன. 1977இல் ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்தபோது இலங்கையின் குடிசனத்தொகையின் 10வீதமான வருமானம் நாட்டின் செல்வத்தில் 39 சதவீதம் இருந்தது. இன்று இந்த 10 வீதத்தினரிடம் 51வீதமான சொத்து இருக்கிறது. இதுதான் இன்றைய பிரச்சனைகளின் அடிப்படை.

www.tamilarangam.net

இப்படி பல முனைகளிலும் தேசத்தின் சோகம் தொடர்கிறது. ஆனால் இந்த நெருக்குவாரங்களை மூடிமறைத்து புதிய முகமூடிகளுடன் தனது சுரண்டலை தொடர்ந்து ஆட்சி அதிகாரங்களை பாதுகாக்க பிரேமதாசாவின் ஐ.தே.க அரசு மிகத் தீவிரமாகவே முனைகிறது.

## யாழ். பல்கலைக்கழக
## மருத்துவ பீட விரிவுரையாளர்
# திருமதி ரஜனி திரங்கம படுகொலை!

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளரும், புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி தற்போது இலண்டனில் வசித்து வரும் திருமதி நிர்மலா நித்தியானந்தனின் சகோதரியுமான திருமதி ரஜனி திராணகம அவர்கள் கடந்த 21-9-89ல் யாழ். பல்கலைக்கழகத் துக்கருகாமையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த செங்கதிர், டில்லி, சின்ன அக்காச்சி ஆகியோரால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கை — இந்திய அரசுகள் பேச்சுவார்த்தைகளின் மூலம் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில், இந்திய அமைதிப் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை தாம் பூரணமாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, அதே சமயம் தமக்கு வேண்டாதவர்களையும் மாற்று இயக்கத்தவர்களையும், தமது போக்குக்கு இணங்காத புத்திஜீவிகளையும் கொலை செய்யும் நடவடிக்கைகளை புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பேரினவாத இலங்கை அரசின் கைக்கூலிகளாக மாறி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைப் படுகொலை செய்ததை தமிழ் பேசும் மக்கள் இலேசில் மறக்க முடியாது. இவ்வாறு அரசியல் தலைவர்களையும், அரச உயர் அதிகாரிகளையும், விரிவுரையாளர்களையும் கொலைசெய்வதையே தமது தொழிலாகக் கொண்டுள்ள புலிகளின் 'சமாதான வேஷத்தை' மருத்துவபீட விரிவுரையாளர் திருமதி ரஜனி திராணகமவின் கொலை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பற்றியும், அவர்களின் எதிர்காலம் தொடர்பாகவும் முதலைக் கண்ணீர் வடிக்கும் மாணவர் அமைப்புகளும், ஏனைய வெகுஜன அமைப்புகளும் இக்கொலை தொடர்பாக இன்றுவரை மௌனம் சாதிப்பது எமக்கு வியப்பை அளிக்கின்றது. அதே சமயம் பல்கலைக்கழக நிர்வாகமும் அதன் விரிவுரையாளர்களும் மாணவர்களும் கூட இவ் ஈனத்தனமான கொலை நடவடிக்கையைக் கண்டிக்காமல் இருப்பது, இத்தகைய கொலை முயற்சிகள் மேலும் தொடர்வதற்கே உதவும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே, இதுபோன்ற கோழைத்தனமான கொலைகளின் மூலம் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய பாசிச நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப்பட்டுக் குரல் கொடுப்பதின் மூலம் இக் கும்பலின் நயவஞ்சகப் போக்கை அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.



யாழ்ப்பாணம்
23-9-1989

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

www.tamilarangam.net

## கருத்து உண்மை........எழுத்து கற்பனை.

------சந்திப்பு------

**பிரேமதாசா** **அத்துலத்முதலி.**

=தாசன்=

அத்து :- வணக்கம்

பிரேம :- வணக்கம், வணக்கம் வாங்கோ. எங்க இவ்வளவு தூரம்?

அத்து :- உங்களோட சில விசயங்கள் சீரியசாய் பேச வேணும்.

பிரேம :- என்னை மதிச்சு இவ்வளவு தூரம் வந்ததுக்கு முதலில எனது நன்றி. பேசுங்கோ.. பேசுங்கோ பேசுறதத்தவிர வேற எங்களுக்கு என்னவேலை.

அத்து :- இண்டைக்கி நாடு பொருளாதாரத்தில மிகவும்கீழ போய்கொண்டிருக்கிறது. அதனால எதிர்கட்சிக்காரங்களுக்கு ஆதரவு கூடிக்கொண்டு போகுது.

பிரேம :- இந்தா பாருங்க பொருளாதாரம் கீழ போகுது மேல போகுது என்டெல்லாம் வீணாக் கவலைப்படாதீங்க நாங்கள் எப்படி ஆட்சியில தொடர்ந்து இருக்கிறது என்டதைப் பற்றி ஐடியா இருந்தால் சொல்லுங்க

அத்து :- வடக்குக் கிழக்குப் பிரச்சனை தெற்குப்பிரச்சனை ஏன் மலையகத்திலேயே பிரச்சனை பொதுவாக

www.tamilarangam.net

இலங்கை முழுக்கப் பிரச்சனை இதையெல்லாம் எப்பிடித் தீர்க்கப் போறீங்க.

பிரேம :- அதுக்குத்தானே அனைத்துக்கட்சி மாநாடு எதிர்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை சகல கட்சிகளோ டையும் தனித்தனி சந்திப்பு இப்படி நீட்டிக் கொண்டுபோறன்.

அத்து :- இதுகளால பிரச்சனையைத் தீர்க்கலாம் எண்டு எனக்கு நம்பிக்கையில்லை.

பிரேம் :- என்ன ஒண்டுமே புரியாமப் பேசிறீங்க பிரச்ச னையைத் தீர்க்கிறதெண்டால் நான் ஏன் இப்படி மாநாடெல்லாம் கூட்டுறன். மாநில சபைய- ளுக்கு அதிகாரத்தைக் குடுத்து நிர்வாகத்தைப் பரவலாக்கி விட்டனெண்டால் பிரச்சனை குறை யுது. பிரச்சனை குறைந்தால்என்ர அதிகாரத் துக்குத்தானே ஆபத்து.

அத்து :- நீங்க நினைக்கிறமாதிரி இன்டைக்கி நிலைமை இல்லை. ஜே.வி.பி சரியா வளர்ந்திட்டுது வடக்குக்கிழக்கு மாநில அரசு தன்ர எண்ணப் படி நடக்குது.

பிரேம :- ஜே.வி.பியை வழிக்குக் கொண்டுவரத்தான் நான் சில தந்திரங்களைக் கையாள்றன். அதா வது எங்கட சித்தாந்தம இனவாதம் தான். அதை இன்டக்கி ஜே.வி.பி எங்களை விடகூடு தலாகவே செய்கிறுங்கள். அவேநாட இந்திய

4

www.tamilarangam.net

எதிர்ப்பு வாதத்தையும், மோசமான துப்பாக்கி மிரட்டலையும் செய்யிறுங்கள் அதால இந்திய எதிர்ப்புவாதத்தை நாமும் மேற்கொண்டு இந்திய இராணுவத்தை வெளியேற்றவும் வழி செய்யுறன் ஒரு எறியில இரண்டு மாங்காய் விழுத்தப்போறன். இன்டைக்கி புலிகள் இயக்கம் என்ர கையுக்குள்ள அவையும் இந்திய இராணுவத்தை எதிர்கினம். இதைப்பயன்படுத்தி மாநிலசபையைக் கலைச்சு தமிழ் இயக்கங்களை அடிபட விடப்போறன். இப்ப புலிகள் என்ர கையுக்குள்ள — நான் என்ன சொன்னாலும் கேப்பான்கள்.

அத்து :— நீங்கள் ஆயுதங்களும், பணமும் புலிகளுக்கு குடுத்திருக்கிறதா வெளியில கதை அடிபடுகிதே

பிரேம :— அதில என்ன தப்பு உதாரணமாய் பாருங்க எங்கட எஜமான் அமெரிக்கா எவ்வளவோ டொலரும் ஆயுதமும் தருகுது. இதையெல்லாம் அவை வெளியில சொல்லிக் கொண்டா இருக்கினம்இல்ல நாங்களும் சொல்லமுடியுமா? அப்படி இருந்தாலும் இந்த விசயம் வெளியில போகாமலா இருக்கு புலிகளுக்கு நாங்கள் ஆயுதம் கொடுத்தால் எங்களுக்குத்தானே பெருமை.

அத்து :— இந்திய இராணுவத்தை அனுப்பிறதில எனக்கும் மகிழ்ச்சி தான் அதுக்குப்பிறகு பிரச்சனை தீர்ந்திடுமா?

www.tamilarangam.net

பிரேம் :- இந்திய இராணுவத்தை அனுப்பிவிட்டு வடக்குக்கிழக்கு மாநில சபையைக் கலைப்பன் அதுக்குமுன்னேற்பாடாகத்தானே பத்தாயிரத்துக்கும்மேலான எங்கட இராணுவத்தை பொலீஸ் என்டபேரில சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தவென்டு சொல்லி அனுப்புறன். வடக்குக் கிழக்கில இருக்கிற இயக்கங்கள் எல்லாம் அடிபட்டு இருக்கிற ரெண்டு இயக்கங்களும் பலவீனமா இருப்பினம் பிறகு அவையளை எங்கட இராணுவம் சுலபமா அடிச்சுப்போடும்.

லலித் :- இப்படியெல்லாம் நீங்கள் செய்வியள் என்டு தெரிஞ்சுதான் வடக்குகிழக்கு அரசு தங்கட பெடியளுக்கு பயிற்சி குடுக்குது.

பிரேம :- அதை தோற்கடிக்கிற வேலைதான் இப்பசெய்து கொண்டிருக்கிறன். வடக்குக்கிழக்கு அரசுஇளைஞர்களுக்கு குடுக்கிற தேசிய பாதுகாப்புப்பயிற்சிய நாங்கள் ஆள்கடத்தல் என்டு விமர்சிக்கிறம்.. அதால இப்ப பன்ரெண்டு வயதுப் பெடியன்கூட வெளிநாடு ஓடுறன். கடத்துறதாகசொல்லிவெள்ளைக்காரனுக்கு கோப்பை கழுவ அதுவும் எங்களுக்கு லாபம் தானே. யாழ்ப்பாணத்தானைப்பற்றி எனக்குத்தெரியாத? முட்டாள் முழு சுயநலவாது

லலித் :- சரி. ஜே.வி.பி.யை எப்படி அடக்கப்போறீங்கள். வடக்குக் கிழக்கைவிட தென்னிலங்கையில தான் பிரச்சனை அதிகம். கடந்த மூந்து கிழமைக்குள்ள ஐயாயிரம் பேர் செத்திருக்கினம்.

www.tamilarangam.net

பிரேம :- அதுக்கு நான் பொறுப்பில்லை இதெல்லாம் முன்னைய ஜனாதிபதியின்ர பிழை. ஜே.வி.பியைவளர்த்துவிட்டதே அவர்தான். இனவாதமும், இந்திய எதிர்ப்புவாதமும் அவையிட்ட இருந்தபடியால் பிறகு ஒருநேரத்தில்எங்களுக்கு உதவும் எண்டு கண்ணை மூடிக் கொண்டிருந்ததிலதான் இப்ப எல்லைமீறிப் போறுங்கள் இருந்தாலும் வடக்குக்கிழக்கை என்ர கைக்குள்ள கொண்டுவந்திட்டனெண்டால் ஜே.வி.பியை அடக்கிறது பெரிய பிரச்சனையில்லை.

லலித் :- எனக் கெண்டால் உங்கட திட்டம் ஒண்டிலும் நம்பிக்கை இல்லை. நீங்கள் எல்லாரையும் முட்டாளாக்கலாம் எண்டு கற்பனை பண்ணுறியள் உது சரிவராது.
சகல பிரச்சனையையும் பாராளுமன்றமுறைமூலம் தான் தீர்க்கலாம்.

பிரேம :- என்னை அசைக்க இஞ்ச ஒருத்தராலயும்முடியாது உங்களால ஏலுமெண்டால் பண்ணிப்பாருங்கோ. இருக்கிற உணவு மந்திரிப் பதவியையும் பறிச்சுப் போடுவன். இப்ப வெளியில போம்......

www.tamilarangam.net

# ஜே.வி.பி..



+உமாகாந்தன்+

நிகால் டீ சில்வா ஒரு சாதாரண மனிதன், கொழும்பு திருகோணமலை பிரதான பாதையில் காடுகருக்கு அண்மையில் - அமைந்துள்ள மெல்சிறிபுர எனும் சிறுகிராமத்தில் வசிப்பவர் அங்குள்ள பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் சாந்தி கபே எனும் சிறு தேநீர் விடுதியை நடத்துபவர். 35 வயதுடைய டீ சில்வாவின் கடைக்கு வந்த மூன்று இளைஞர்கள் தேநீர் தருமாறு கேட்டுக்கொண்டு அங்குள்ள ஆசனங்களில் அமர்கின்றனர் தேநீரை தயாரித்த டீ சில்வா தேநீரை அம்மூவரின் முன் நீட்டுகிறார். அவர்களின் கைகளிலுள்ள றிவால்வர்கள் டீ சில்வாவின் முகத்தை நோக்கி நீள்கின்றன. தோட்டாக்கள் டீ சில்வாவின் முகத்தை துளைக்கின்றன. இரத்தம் சிதற அந்த இடத்திலேயே டீ சில்வாவின் உயிர் பிரிகிறது. கொலைஞர்கள் சாவதானமாக எழுந்து செல்கின்றனர். இந்தக்கொல்லப்பட்ட டீ சில்வா ஐக்கிய தேசியக் கட்சியின்சாதாரண ஆதரவாளர். இவரை ஒத்த ஆயிரக்கணக்கான அப்பாவி பாட்டாளிச் சிங்கள மக்களின் உயிர்கள் இன்று கோரத்தனமாக பறிக்கப்படுகின்றன.

தயா பத்திரான - சுயாதீன மாணவர் சங்கத்தின் தலைவர் மாத்தறையிலுள்ள அப்பாறக்க எனும் கிராமத்திலுள்ள ஒரு

www.tamilarangam.net

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை ஒரு விதியோர பழவியாபாரி, மனித உரிமைகளை மீறும் ஜே.வி.பியின் பாசிசத்தையும், படுகொலைகளையும் கண்டித்ததால், இவர் ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டு இவரது உடல் துண்டுகளாக வெட்டப்பட்டு பேலியகொடையில் கண்டெடுக்கப் பட்டது. இவரை ஒத்த ஏராளமான மாணவர்கள் இன்று ஜே வி.பியின் கொலை வெறிக்கு பலியாகி வருகின்றனர்.

நந்தன் மாறசிங்க – 1971ல் ஜே.வி.பி கிளர்ச்சிகளின் உச்சகாலகட்டத்தில் ஜே.வி.பி. க்கு ஆதரவான இவரது பாடல்களும், இவரும் சிங்களமக்களிடையே மிகுந்த பிரசித்தமாகவிருந்தனர். பின்னர் ஜே.வி.பியை விட்டு விலகிய மாறசிங்க ஒரு சுதந்திரமான கலைஞராக இருந்து கொண்டு தன்னுடைய வாழ்க்கையைஓட்டுவதற்காக அநுராதபுரம் மக்கள் சந்தையில் காலணிகளை விற்றுவருபவர். இவர் ஜே.வி.பியினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் மாத்திரமல்ல இலங்கை வானொலி, மற்றும் தொலைக்காட்சி சேவைகளில் பணியாற்றி வரும் பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் தொடர்ந்து ஜே.வி.பியினால் கொல்லப்பட்டு வருகின்றனர்.

ஜேம்ஸ் அத்துல்கல – இவரும் 1971 ஜே.வி.பி கிளர்ச்சியில் பங்குபற்றியவர். இதன் காரணமாக பல வருடங்களை சிறையிலும் கழித்தவர். ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். முரண்பாடுகள் காரணமாக ஜே.வி.பியிலிருந்து விலகி மக்கள் கட்சியில் இணைந்து செயல்படுபவர். இவர் குருநாகலையில் வைத்து ஜே.வி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இது போலவே நவசமசமாஜக் கட்சியின் ஆதரவு மாணவர் அமைப்பின் தலைவர் ஆனந்த நவரத்தின, கல்விமானும் இடதுசாரி

www.tamilarangam.net

முற்போக்குச் சிந்தனைகளையும் கொண்டவன். போகடர
முல்ல பிரம்மலோக தேரோ. பேராசிரியர் ஸ்ரான்லி விஜ
யசுந்தர, இடதுசாரி அமைப்புக்களுடன் தொடர்புகொண்ட
மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் டி.எச் ஜெயவர்த்தன
தொழிற்சங்கத் தலைவரான நந்தசேன டீ சில்வாஆகியோ-
ரும் இவர்களை ஒத்த பல நூற்றுக்கணக்கானோரும் ஜே.வி.பி
யினால் கோரத்தனமாக கொல்லப்பட்டுள்ளனர்.

இதுமாத்திரமல்ல ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட போ
க்குவரத்து வேலை நிறுத்தத்தின் போது ஜே.வி.பியின் கோ
ரிக்கையை ஏற்க மறுத்து வேலைக்குச் சென்ற அல்லதுஅரசின்
ஆயுத நிர்ப்பந்தத்தினால் வேலைக்குச் சென்ற 150க்கும்மேற்
பட்ட சிறிலங்கா போக்குவரத்துச் சபையின் அப்பாவி ஊழி
யர்கள் ஜே.வி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரி ஊழியர்களான தன்னுடைய இரு உறுப்பினர்கள் —
போஸ்ரர் ஒட்டும்போது கைதுசெய்யப்பட்டதால் அவர்கள்வி
டுதலை செய்யப்படவேண்டும் என்று கோரி ஜே.வி.பியிரட்டி
நடத்திய வேலை நிறுத்தத்தின் போது ஆஸ்பத்திரிகளில் படுக்
கைகளிலேயே சிகிச்சை வசதிகிட்டாத காரணத்தால் பல
நூற்றுக்கணக்கான குழந்தைகளும், முதியவர்களும் பிரசவசிகிச்
சைகிட்டாத பெண்களும் துடிக்க துடிக்க இறந்துள்ளனர். சில
இடங்களில் அவசரசிகிச்சை அளிக்கமுற்பட்ட வைத்தியர்களும்,
ஊழியர்களும் ஜே.வி.பியினால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி என்பது சர்வதேச முதலாளித்துவ பிரச்சாரச்சா
தனங்களால் அடையாளம் காட்டப்படுவதுபோல் ஒரு மார்க்
சிச பின்னணி கொண்ட இடதுசாரி அமைப்பல்ல. இது இன
வெறிபிடித்த ஒரு பாசிசக் கொலைக் கும்பல். பல்லாயிரக்க

www.tamilarangam.net

ஸைக்கான அப்பாவி மக்களைக் கொலைசெய்து மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் ஒரு கூட்டம்.

இந்த ஜே.வி.பி இதுவரைகாலமும் இலங்கையில் நசிக்கப்பட்டுவரும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக எந்தப் போராட்டத்தையும் நடத்தியதில்லை. இவர்கள் இதுவரை நடத்திய கர்த்தால்களும், வேலைநிறுத்தங்களும் தன்னுடைய வலிமையைக் காட்டவும் தன்னுடைய நலனைக் காட்டவுமே.

இதுமாத்திரமல்ல துப்பாக்கிமுனையில் காட்டுத் தர்ப்பார்நடத்திவரும் ஜே.வி.பி.இதுவரைகாலமும் தனது அரசியல் திட்டங்களையோ அன்றி சீரழிவில் சிக்கியிருக்கும் இலங்கையைமீட்கும் பொருளாதாரத் திட்டங்களையோ அன்றி இன்றைய அனைத்து பிரச்சனைக்கும் காரணமான இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக தனது நிலைப்பாடுகளையோ தெளிவுபடுத்தியது கிடையாது.

அத்துடன் நாம் இதுவரை கண்ட இனவாதிகளில் மிக மோசமமான இனவெறியினர் ஜே.வி.பியினரே இவர்கள். தமிழ்பேசும் மக்களை இலங்கைப் பிரஜைகளாக ஒத்துக் கொள்ளவே விரும்பாதவர்கள் இன்று நீண்டகால சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்களின் சுரண்டலால் சமூகமற்றும் பொருளாதார சீரழிவுகளால் சிக்கித் தவிக்கும் சிங்கள மக்களிடையே தாம்பரவுவதற்காக ஜே.வி.பி கட்டவிழ்த்துவிடும் இந்திய எதிர்ப்புவாதம் என்பது உண்மையிலே தமிழ் மக்கள் மீதான எதிர்ப்புவாதமாகும்.

www.tamilarangam.net

உதாரணமாக இந்திய எதிர்ப்பு என்ற போர்வையில் இந்திய பொருட்கள், திரைப்படங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் மீது தடைவிதித்திருக்கும் ஜே.வி.பி இலங்கை, அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களின் தாராள சுரண்டல் சந்தையாகிப் போனதை என்றுமே தடுத்ததில்லை. மலிந்த பிரித்தானிய மற்றும் அமெரிக்க பாலியல் திரைப்படங்களும் சஞ்சிகைகளும் - இலங்கையின் கலாச்சாரத்தை பாழ்பண்ணுவதற்கு வெகு தாராளமாகவே ஜே.வி.பி தளம் அமைத்துக்கொடுத்துள்ளது.

தமிழ் மக்கள் மீது ஜே.வி.பி கொண்டுள்ள எதிர்ப்புக்கு இன்னுமொரு உதாரணம் மாகாணசபை அமைப்புக்குள் தமிழ் மக்கள், ஒரு சிறு உரிமையைக் கூட எடுத்துவிடக்கூடாது என்பதில் கவனம் கொண்ட ஜே.வி.பி இவ்வமைப்பை எதிர்ப்பதுடன் இந்தியப்படை வெளியேற்றம் குறித்து வற்புறுத்துகிறது.

அத்துடன் ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கை உட்பட பல விடயங்கள் தமக்கு சார்பாக இருப்பதை வைத்து - புலிகள் போன்ற சிலர் ஜே.வி.பியை தமிழ் மக்களிடையே முற்போக்கு அமைப்பாகக் காட்டமுயல்வதும், ஜே.வி.பியின் நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்காமல் மௌனமாக இருப்பதும் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்யும் மகத்தான துரோகமாகும்.

இந்திய படைகள் இலங்கையை விட்டு வெளியேறியபின் ஜே.வி பியின் இந்திய எதிர்ப்பு வாதம் என்பது தமிழர் எதிர்ப்புவாதமாக மாறும் என்பதும் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப்படும் என்பதும் தெளிவாக - ஆரம்பித்துவிட்டன.

www.tamilarangam.net

உதாரணமாக வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கு எதிரான மிகக் கடுமையான எதிர்ப்புப் பிரசாரத்தை ஜே.வி.பி தற்போது மேற்கொண்டு வருகிறது. அநுமாத்திராயல்ல 'ரன்கன்ட' என்ற தமது வானொலி ஒலிபரப்பில் உரையாற்றியமுருகனை விஜயவீர புனர்வாழ்வு என்ற பெயரில் திருகோணமலையில், தமிழ் மக்கள் குடியேற்றப்படுவதை கண்டித்தமை, மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்லும் தமிழ் நோயாளர்களுக்கும் அவர்களோடு கூடச் செல்பவர்களுக்கும் வைத்திய-சாலையை அண்டியுள்ள பகுதிகளில் இடம்கொடுக்கக் கூடாதென அப்பகுதியினர் எச்சரிக்கப்பட்டமை (ஆதாரம்-திசை-10.9 89) ஆகியவை ஜே.வி.பி.யின் உண்மை நிலையை தெளிவாக் குகின்றன.

அத்துடன் மலையகத் தமிழ் மக்களுக்கெதிராக ஜே.வி.பியினர் சமீபகாலமாக வெளியிட்டுவரும் கருத்துக்களும் பூவைாதத்தம் மிக்கவையாகவே இருக்கின்றன. எந்தவிதமான வசதிகளுமின்றி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக ஓடாக உழைத்துத் தேய்ந்த மலையகத் தமிழர்களை ஏகாதிபத்தியத் திண்ணைக்கூலிகளென்றும் இந்தியாவின் நலன்களைக் காக்கவே இவர்கள் இவர்கள் இங்கு குடியமர்த்தப்பட்டனர் என்றும் சிங்கள விவசாயிகளின் நிலங்கள் பிடுங்கப்பட்டு அவைகள் மலையகத்தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட்டு சிங்கள மக்கள் அநாதரவாக்கப்பட்டனர் என்றும் ஜே.வி.பி விசமக்கக்க ஆரம்பித்துள்ளது.

இந்தியப் படை இருக்கும்போது தமிழ் மக்களைத் தாக்கினால் அதனைக் காரணம்காட்டி இந்தியப்படை தென்பகுதிக்குள்வந்து விடும் என்ற பயத்தினால் தற்போது அமைதியைக் கடைப்பிடிப் பதாகக் காட்டும் ஜே.வி.பியினர் இந்தியப் படையினர்வெளி யேறியதும் தமது சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்துவிடுவார்கள்

www.tamilarangam.net

# ஆட்கடத்தலா .....?
# அல்லது படைதிரட்டலா ?

வடக்கு–கிழக்கு மாகாணங்களில் சமீபகாலங்களில் இயக்கங்களினால் ஆட்சேர்ப்புக்கள் குறித்து இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. அதுவும் தேசத்தின் இரத்த காயங்களைக் காட்டி வெளிநாடுகளில் வதிவிடங்கள் பெறுவதில் அக்கறைகொண்டுள்ள இம்மவர்களில் பலர் இதுபற்றி மிகைபடக்கூறிகொண்டு அதுவும் குறிப்பாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்நிலையைமிகைப்படுத்தி தமது குடும்ப அங்கத்தவர்களை வெளிநாட்டுக்கு இழுப்பதில் தீவிர அக்கறை கொண்டுள்ளனர். இதுகுறித்து வேறுபட்ட கருத்துக்களை நாம் சற்று – நோக்குவோம்.

12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் வீட்டில் இருக்கமுடியாது ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், ஆகிய இயக்கங்கள் இவர்களைக் கடத்திக் கொண்டு போய் கட்டாய, இராணுவ பயிற்சிக்கு உட்படுத்துகின்றன. இதனால் பல நூற்றுக்கணக்கானோர் கொழும்புக்கு அகதிகளாக வந்து கொழும்பில் அகதிகள் முகாம்களில் இருப்பதாகவும் இன்னும் பலர் நாட்டில் இருக்கமுடியாமல் வெளிநாடுகளுக்கு 'தப்பி' வருவதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்த 'அகதிகளுக்கு சிறீலங்கா அரசபடைகள் கொழும்பில் பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டது. இன்னும் சிலர் ஒருபடி மேலே சென்று இந்த 'அகதிகளுக்காக' நிதிசேகரிப்பும் செய்தனர். பல 'புத்திஜீவிகள்' திடீரென தமிழ்பேசும் மக்களின்.... மாணவர்களின் கல்வி....எதிர்காலம்குறித்து

www.tamilarangam.net

அக்கறை கொண்டவர்களாக 'ஏயோ' தமிழ் மாணவர்களின் கல்வி பாழாகிறதே என்று அழுது புலம்பினார்கள்.

இந்த நிலையில் இந்த வாக்குமூலங்களை இவ்விடத்தே நிறுத்தி கொண்டு இதிலுள்ள உண்மை... பொய்களை நோக்குவோம்.

இயக்கங்கள் இளைஞர்களையும் மாணவர்களையும் கட்டாய இராணுவப்பயிற்சிக்கு சேர்த்தது உண்மை. இது குறித்த இயக்கங்களின் கருத்தை பின்னர் பார்ப்போம். அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட இயக்கங்கள் மாத்திரமல்ல விடுதலைப் புலிகள் அமைப்புக்கூட 12 வயதுச் சிறுவர்களை கடத்திச் சென்று கட்டாய இராணுவப் பயிற்சியை காட்டில் அளித்துவருவதை 'இந்து' பத்திரிகை புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தது. அது மாத்திரமல்ல இப்படி கட்டாயப்படுத்திச் சேர்க்கப்படும்சிறுவர்கள் தலைவர்கள் பூரண பாதுகாப்புடன் மறைந்திருக்க. ..சிறுவர்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் இந்திய இராணுவத்துடன் மோதி மரணிக்கிறார்கள். பலர் தமது உயிர் மீது கொண்டுள்ள ஆசை இவ்விடயம் பற்றி அவர்களது வாயைமூடச் செய்துள்ளது.

அடுத்தது கொழும்பு 'அகதி' முகாம்பற்றிய உண்மைகள் தற்போது அம்பலமாக ஆரம்பித்துவிட்டன. இவை உண்மையில்விடுதலைப் புலிகளின் முகாம்களே என்றும் ஆரம்பத்தில் பம்பலப்பிட்டியில் அமைந்திருந்த இம்முகாம் தற்போது இரத்மலானை விமான நிலையத்துக்கு அண்மையில் மாற்றப்பட்டு அங்குவைத்து இவர்களுக்கு ஆயுதப்பயிற்சியையும் ஆயுதங்களையும் எஸ்ரிஎவ் எனப்படும் சிறீலங்கா விசேட அதிரடிப் படையினர் வழங்கி வருவதையும் புலிகள் சிறீலங்கா படையினரின் சீருடைகளை அணிந்து கொழும்பில் ரெலோ மற்றும் இதர அமைப்புக்களின்உறுப்பினர்களையும், விடுதலைப் புலிகள்அமைப்பிலிருந்து தப்பிவரு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பவர்களையும் வெளிநாட்டுக்குப் போவதற்காக கொழும்பில் தங்கியிருப்பவர்களையும் கைதுசெய்து வருவதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அம்பலப்படுத்தி தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது. அப்படியானல் இந்த 'அகதி'களுக்காக சேர்த்த பணம் எங்கே? சேர்த்தவர்களுக்குத்தான் தெரியும். அதே சமயம் தமிழ் மாணவர்களின் கல்வி குறித்து ஐரோப்பாவின் பாதுகாப்பான சொகுசுச் சூழலில் இருந்துகொண்டு கவலைப் பட்டுக்கொண்டு கண்ணீர்வடிக்கும் கனவான்களின் சோகச்சுமையைக்குறைக்கும் வகையில் 'சண்டேரைம்ஸ்' செய்தியின்படி முழு இலங்கையிலும் பாடசாலை ஒழுங்குகளும், பரீட்சை பெறுபேறுகளும் வடக்கு கிழக்கிலேயே அதிகம் என தெரிகிறது. அமைசர் காமினி திசநாயக்கா ஒருபடிமேலே சென்று மேலையுத்தவிமானங்கள் பறக்கையிலும் கீழே திறந்து நிற்கும் வடக்கு கிழக்கு பாடசாலைகளை மெச்சி நிற்கிறர்.

அடுத்தது எப்போது தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் உட் கொலைகளை முடுக்கிவிட்டதோ.....எப்போது புலிகள் ரெலோ,பிளட்,ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் அமைப்புக்கள்மீது தமது கொலை வெறியாட்டத்தை தொடங்கினரோ அப்போது பாரிய அளவிலான இளைஞர் வெளியேற்றம் தொடங்கிவிட்டது ஏதோ இப்போதுதான் இது நடப்பதாகக் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். அதுமாத்திரமல்ல இந்த சிறு வயது இளைஞர்களது கல்வி எதிர்காலம் குறித்து கவலைப்படுபவர்-கள்.... அவர்கள் இந்த சிறுவயதிலேயே ஐரோப்பாவின் உணவு விடுதிகளில் கோப்பை கழுவுபவர்களாகவும்... நாய்கள் சுரந்த குறைந்த கூலிக்கு பிரசுரங்களை விநியோகிப்ப-வர்களாகவும் சுரண்டலுக்கு பயன்படுத்தப்படுவது குறித்துமௌனமாக இருக்கிறார்கள். இவர்களது எதிர்காலம் குறித்து முதலைக் கண்ணீர் வடிப்பவர்கள் இவர்களுக்கு எதுவுமே செய்யத் தயங்குகிறார்கள்.

www.tamilarangam.net

அதேவேளையில் மேற்படி இராணுவப்பயிற்சிக்காக இளைஞர்
களை சேர்க்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
அறிக்கை 'தமிழ் பேசும் மக்களாகிய நாம், எம்மை நாமே
பாதுகாத்துக்கொள்ளவேண்டிய நிலையை நோக்கி முன்னேற-
வேண்டியுள்ளது. மீண்டும் ஒருதடவை சிறீலங்கா அரசபடைகள்
எமது மக்களை கொன்று குவிக்க நாம் அனுமதிக்கப் போகி
றோமா? என்று கேள்வி எழுப்பியதுடன் எமது தலைவிதியை -
நாமே தீர்மானம் செய்ய வீட்டுக்கு ஒருவரை தருமாறுகோ
ருகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மத்திய குழு உறுப்பினர் தோழர் .
கேதீஸ்வரன் இது குறித்து குறிப்பிடுகையில் 'நாம் தொண்டர்
படைக்கு ஆட்சேர்க்கும் விதம் குறித்து புகார்கள் கூறப்படுகி
ன்றன. அரசியல் கட்சி என்ற வகையில் இத்தகைய நடவடி
க்கை பாதகமாக அமையலாம். ஆனால் எமது மக்களின்பாது
காப்புக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் உரிய
நடவடிக்கைகளை எடுப்பது அவசியமே என்று கூறிய அவர் அ
அழைத்துவரப்பட்ட 5000 இளைஞர்களில் 350பேர் மட்டு-
மேதொண்டர் படையில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்

அதேசமயம் பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்க
ளைத் யாழ்.மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி
பெரியநம்பி தலைமையிலான குழுவினர் வேலணையிலுள்ள ஈ.பி
ஆர்.எல்.எவ் பயிற்சி முகாமில் சந்தித்தபோது ஒரு மாணவ
ரும் வீடு திரும்பத் தயாரில்லை என்று கூறியதுடன் 'எமதுமக்
களுக்கும் ,நாட்டுக்கும் தற்போது பலவகைகளிலும் ஏற்பட்டு
ள்ள ஜனநாயக மறுப்புக்கும், சீரழிவுக்கும் எதிராக நாம் -
தொடர்ந்து போராடி தமிழ் மக்களுக்கு விடிவுகாண திட

www.tamilarangam.net

சங்கற்பம் பூண்டுள்ளோம் என்று கூறியதை மேற்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர் 'முரசொலி' பத்திரிகையில் அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

மீண்டும் தமிழ்பேசும் மக்கள் மீது ஒரு இரத்தக் களரியைகட்டவிழ்ந்து விடுவதற்கான தயாரிப்புக்களில் சிறீலங்கா அரசும் அதற்கு வழி அமைத்துக் கொடுப்பதில் புலிகளும் தீவிரமாகஈடுபட்டிருப்பது குறித்து ஒரு வார்த்தை கூடக்குறிப்பிடாமல்-. தமிழ் மக்களின் எதிர்காலப் பாதுகாப்பு குறித்து எவ்விதஅக்கறையும் கொள்ளாமல் வெறும் வார்த்தைச் சித்துக்களால் ஏமாற்று நடத்தும் இவர்களை மக்களுக்கு இனம் காட்டுவோம்

அதே சமயம் சிறீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளைஎதிர்கொள்ள எமது இனத்தை பாதுகாப்பாக உறுதியான சக்திவாய்ந்த ஒரு தேசிய இராணுவம் அவசியம் என்பதை-யும் மனதில் பதிப்போம்.

**அம்பாறையில் புலிகள்-சீறிலங்கா அரசு கூட்டுச்சதி.**

05.11.89 ஞாயிறன்று அம்பாறைப்பிரதேசத்திலுள்ள திருக்கோவில், தம்பிலுவில் ஆகிய இடங்களிலுள்ள EPRLF TELO முகாம்கள்மீது சீறிலங்கா அதிரடிப்படையினரும் அவர்களோடு இணைந்து அவர்கள் சீருடையில் புலிகளும் நவீன ஆயுதங்கள் சகிதம் தாக்குதல் நடத்தி உள்ளனர். சிங்களபடைகளோடுசேர்ந்து புலிகள் நடத்திய இத்தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியப்படைகள் விலகிய அம்பாறைப்பிரதேசத்துக்கு சீறிலங்காஅரசு சிங்களப் படைகளை அனுப்ப புலிகளுடன் சேர்ந்து செய்யும் சதியின் முன்னோடியே இதுவாகும்.


www.tamilarangam.net



# லகம் : எமது பார்வையில் . .









தொகுப்பு : =சூர்யன்=

www.tamilarangam.net

பிரான்சு:-

அரசிற்கு தலைவலியை கொடுக்கும் வேலைநிறுத்தங்கள்

சமீப காலங்களாக பிரான்சில் நடந்துவரும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் ஆளும் சோசலிச அரசிற்கு தலைவலியை கொடுப்பனவாக அமைந்துள்ளன. ஊதிய உயர்வுகோரி, சிறைக்காவலர்களும், தனியார் துறையான பேர்ஜோ மோட்டார் வாகன தொழிலாளர்களும் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்கள் அரசினால் சாதுர்யமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்கப்பட்டுள்ள போதிலும் அரசின் முக்கிய துறையா வரி சேகரிப்பு பிரிவுத் அலுவலர்கள் நடத்தும் வேலைநிறுத்தம் தொடர்கிறது. அதிக ஊதியம் கோரி நீண்ட நாட்களாக நடைபெறும் இவ்வேலைநிறுத்தத்தினால் வரி சேகரி-ப்பு நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் இதர பல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரான்சின் தொடர்ச்சியான 4வீத பொருளாதார வளர்ச்சியையும், ஏற்றுமதி அதிக - ரிப்பு மற்றும் உறுதியான பொருளாதார நிலையையும் காரணம் காட்டி தொழிற் சங்கங்கள் ஊதிய உயர்வை கோருகின்றன. ஆனால் பிரதம மந்திரி மிசேல் றொக்கார்டே 1980ம் ஆண்டு பொருளாதார தேக்க நிலையையும் பணவீக்க அதிகரிப்பையும் காரணம் காட்டி ஊதிய அதிகரிப்பு மீண்டும் இந்நிலையையே ஏற்படுத்தும் எனக்கூறுகிறார். திரு.றொக்கார் இதுபற்றி மேலும் கூறுகையில் தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும்அதிகயுதவி வழங்கப்படவேண்டும், அவர்களுக்கெதிரான சமூக அநீதிகள் களையப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை தாம் அநுதாபத்துடன் நோக்குவதாகவும் ஆனால் பாரிய துண்டுவிழும் தொகையை பிரான்சின் வரவு செலவுத் திட்டம் எதிர்நோக்கும் இன்றைய நிலையில் இவை குறித்து அதிகமாக எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது எனவும்கூறினார் 10 வீதமான வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டியது ஒரு மிக முக்கியமான பிரச்சனை என்று கூறிய திரு.றொக்கார்ட் சமூகநல செலவீடுகளை அதிகரிப்பது மீண்டும் பணவீக்கத்தை அதிகப்படுத்தி பொருளாதார வளர்ச்சியை தடுத்துவிடும் என்றும் கூறியுள்ளார். சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் ஜனாதிபதி மித்திரோன் மீதும் பிரதமர் றொக்கார்ட் மீதும் மக்கள் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளதையும் உறுதிப்படுத்துவதாகவே அமைகின்றன.

அகதிகள் வருகை அதிகரிக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பிரான்சில் வசிப்பதற்கு புதிதாக வருபவர்களின் எண்ணிக்கை சராசரியாக ஒரு இலட்சத்து 20ஆயிரமாகும் என அரசின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. அதே சமயம் அரசியல் புகலிடம் கோரி அகதிகளாக பிரான்சுக்கு வருபவர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இவ்வறிக்கை கூறுகிறது. 1983இல்20 ஆயிரமாக இருந்த இந்த அகதிகள் வரவு 1988ல் 27,672 ஆக அதிகரித்தது.ஆனல் 1988ல் இவ்வரவு 34,352 ஆக இருந்தது. 1989முடிவில் இவ்வருடத்துக்கான வரவு 60ஆயிரமாகும் எனக்கூறப்பட்டுள்ளது. ஆனல் 1987ம் ஆண்டு 8,704பேரும், 1988 இல் 8,974பேரும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர் என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1988இல் ஆயிரக்கணக்கானோர் படுகொலை

சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

1988ம் ஆண்டில் உலகம் முழுவதும் குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் அரசபடைகளாலும், அரசமுகவர்களாலும் கொல்லப்பட்டுள்ளதாகசர்வதேச மன்னிப்புச் சபை தன்னுடைய அறிக்கையில் வெளியிட்டுள்ளது. கொலம்பியா கௌதமாலா, எல்சல்வடோர், சிரியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகள் மிகமோசமானபடு கொலைக்களங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. பர்மா அரசின் படுகொலைகளும், குர்தீஸ் மக்களுக்கெதிரான ஈராக்கின் தாக்குதல்களும், பெரு, சோமாலியா, எதியோப்பிய துருக்கி, புருண்டி, இந்தோனேசியா, சீனா ஆகிய அரசின் அத்துமீறல்களும், மேற்படி சபையின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளன.

இலங்கையில் ஆயுதம் ஏந்திய குழுக்களை அடக்கும் முயற்சியில் அப்பாவி மக்களுக்குபாதிப்பை ஏற்படுத்திவரும் இந்திய, சிறீலங்கா படைகளின் நடவடிக்கைகளையும் இச்சபைகண்டித்துள்ளது.

சோவியத் "யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மனித உரிமைகள் பேணலில்" கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிட்டிருக்கும் அறிக்கை அதிகமான மரணதண்டனைகளை நிறைவேற்றும் அமெரிக்க அரசின் நடவடிக்கை, அயர்லாந்தில் பிரித்தானிய படைகளின் அத்துமீறல்கள், நியூக்கலிடோனியாவில் கிளர்ச்சியை அடக்க பிரெஞ்சு அதிரடிப்படை நடந்து கொண்ட முறை ஆகியவற்றையும் கண்டித்துள்ளது.

முன்னரை போலல்லாமல் சர்வதேச சமூகமானது அரசுகளின் அத்துமீறல்கள் குறித்துஅதிகசிறப்பான தகவல்களையும் பெறக்கூடியதாக இருக்கும் இந்நிலை எதிர்காலத்தில் அடக்குமுறை அரசுகளுக்கு பலசிக்கல்களை ஏற்படுத்தும் எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பா:-

அகதிகள் வெளியேற்றம், சீர்திருத்தங்களைக் கோரி மக்கள் கிளர்ச்சி, அரசியல் மாற்றங்கள்.

கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஏறத்தாழ 60ஆயிரத்தை அண்மித்த கிழக்கு ஜேர்மன் பிரஜைகள் அகதிகளாக மே.ஜேர்மனிக்கு சென்றுள்ளனர். பெரிய அளவிலான இந்தஅகதிகள் வெளியேற்றமும் சோவியத் யூனியனைப் போன்ற அரசியல் சீர்திருத்தங்கள் கி. ஜேர்மனியிலும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று தொடர்ச்சியாக பல்லாயிரக்கணக்கானமக்கள் கி.ஜேர்மனியின் நகரங்களில் நடத்திவரும் ஆர்பாட்டங்களுக்கு கி.ஜேர்மன் அரசுக்கு நெருக்குவாரங்களை ஏற்படுத்தியுள்ளன. சோவியத் தலைவர் கோர்பசேவின் - கிளாஸ்நோஸ்ட், பெரஸ்தொய்கா சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்து வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கி.ஜேர்மனியின் நீண்ட நாள் ஆட்சித் தலைவர் எரிச் கொனேக்கர் தமது 18 வருட ஆட்சியின் பின்னர் தமது 77வது வயதில் தமது உடல்நலக் குறைவை காரணம் காட்டி பதவிவிலகியுள்ளார். புதிய தலைவராக 52 வயதுடைய எகோன் கிறென்ஸ் தெரிவு - செய்யப்பட்டுள்ளார். பல தரப்பட்ட நெருக்குவாரங்களை நோக்கும் கிறென்ஸ் சோவியத் தலைவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து கி.ஜேர்மனியில் பல அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.

அதேசமயம் போலந்தின் மாற்றங்களைத் தொடர்ந்து கங்கேரியின் ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட்டுக் கட்சியும் தனது கொள்கையிலிருந்து சற்று விலகி தன்னை சோசலிசக் கட்சியாக அறிவித்துள்ளது. செக்கோஸ்லவாக்கியாவின் தலைநகரான பராக்கிலும் சீர் திருத்தங்களைக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளையில் கம்யூனிஸ் கட்சியை நிராகரித்து சொலிடாரிற்றி அமைப்பிடம் ஆட்சியை கையளித்த போலந்து மக்கள் தமது கனவுகள் உடைந்துவிட்டதாக கருத ஆரம்பித்துள்ளனர். நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவும், மே.ஐரோப்பிய நாடுகள் உறுதியளித்த உதவிகளை செய்யாது விட்டதும், புதிய அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கை-கள் கறுப்புப்பணம், மற்றும் கள்ளச் சந்தைக்கு வழி கோரியதும் மக்களை ஆத்திரப்படுத்தியுள்ளது. புதிய அரசின்போக்கு சொலிடாரிற்றி தலைவர் வலேசாவாலும், அமைப்பின் ஆதரவாளர்களாலும் கூட கண்டிக்கப்பட ஆரம்பித்துள்ளது.

சோவியத் அரசின் குரலாக ஒலித்துவந்த 'பிராவ்தா' பத்திரிகையின் ஆசிரியர் விட்ட' விக்டர் அபானசேவ் பதவி விலக்கப்பட்டு புதிய ஆசிரியராக இவன்கபுறலேவ் நியமிக்க பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா :-

ஆபிரிக்க காங்கிரசின் எழுச்சி

கடந்த 25 வருடங்களாக தென்னாபிரிக்க நிறவெறியர்சிறில் சிறைவைக்கப்பட்டு சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட தமது எழு தலைவர்களையும் வரவேற்கும் வகையில் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலை அமைப்பான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாபெரும் எழுச்சிக் கூட்டம் ஒன்றை நிகழ்த்தியுள்ளது. 80 ஆயிரத்துக்கு மேற்பட்டமக்கள் கலந்து கொண்ட இம்மாபெரும் கூட்டம் 1912ம் ஆண்டு உருவாக்கப்பட்டதில் இருந்து நடைபெற்றதில் மிகவும் பெரிதாகக் கருதப்படுகிறது. 1960ம் ஆண்டுநிறவெறி ஆட்சியாளர்களால் தடைசெய்யப்பட்ட பின்னர் நடந்தபகிரங்க கூட்டமும் இது தானாகும்.

கொடிகளுடன் தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகளும் பகிரங்கமாக பாரிய அளவில் பறக்கவிடப்பட்டன. எழுச்சி கோசங்களுடன் மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நீண்டநாள் சிறைக் கைதியும் முக்கியஸ்தருமான திரு.விக்டர் சிசிலு தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களின் விடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைக்கான ஆயுதப்போராட்டத்தை கைவிடவில்லை எனவும் ஆயுதப்போராட்டமே அரசின் மீது அழுத்தத்தை பிரயோகித்தது என்றும் கூறியதுடன் ஆனால் அரசு முன்வரும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளின் வழிவரும் தீர்வுகளையும் ஏற்றுக்கொள்ளும் என்றும் கூறினார்

தலைவர் ஒலிவர் தம்போவின் செய்தி 'தென்னாபிரிக்க அரசு நிறவாதத்தை நீக்குவதற்கான வழி போரா அல்லது பேச்சுவார்த்தைகளா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலையில் உள்ளது' எனக்குறிப்பிட்டது.

தென்னாபிரிக்க நிறவெறியரசு மீதான தடையை நீக்குவதாக அறிவிக்காத போதும் இக்கூட்டத்தை தடுப்பதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாள்நெருங்குவதை இந்த எழுச்சி காட்டுகிறது.

## நோபல் பரிசு சர்ச்சைக் குரியதா.....?

1989ம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு தீபெத்தின் ஆன்மீக அரசியற் தலைவரும் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளவருமான தலாய் லாமாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்குலகம் நோபல்பரிசுகளை வழங்கும் விதம் சர்வதேசகத்தையும், சர்ச்சைகளையும் கிளப்பியுள்ளது. இடதுசாரி அரசியல் அமைப்புக்களை கொண்டுள்ள நாடுகளில் அல்லது மேற்கு நாடுகளுக்கு எதிரான அரசியல் போக்குகளைக் கொண்டுள்ளநாடுகளில் அரசுக்கு எதிராக இத்தகைய பரிசுகளை வழங்கி குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலேயே நோபல் பரிசு பயன்படுகிறது. சோவியத்தில் சக்காரோவ் போலந்தில் வலேசா அவ்வழியில் இப்போது சீனாவிற்கு எதிராக இப்போது தலாய் லாமாவிற்குப் இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. எனக் கருதப்படுகிறது. இது குறித்து கருத்துதெரிவித்த பிரெஞ்சுக் கம்யூனிஸ் கட்சி பொதுச் செயலாளர் ஜோர்ஜ் மார்சேய் நிலச்சுவாந்தர்களின் பிரதிநிதியாகிய தலாய்லாமாவிக்கு நோபல் பரிசு வழங்கியவர்கள் தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களது விடுதலைக்காகப் போராடி கடந்த 26 வருடங்களாகசிறை வைக்கப்பட்டிருக்கும் நெல்சன் மண்டேல விற்கு இப்பரிசை இதுவரை வழங்காததிலிருந்து இவர்களின் நோக்கத்தை புரிந்து கொள்ளமுடிகிறது எனக் கூறியுள்ளார்.

நிக்கரகுவா:-

## நிக்கரகுவாவில் மீண்டும் அமெரிக்க நீசத்தனம்

நிக்கரகுவாவை நாசப்படுத்தும் தனது நீசத்தனமான சதிகளை மீண்டும அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. சர்வதேச கண்டனங்கள் காரணமாக சிறுகாலம் இடைநிறுத்தப்பட்ட இச்சதிகள் மீண்டும் அமெரிக்க கூலிப்படையான கொன்றாஸ் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளது நிக்கரகுவாவின் பொதுத்தேர்தல்கள் பெப்ரவரி 90இல் என் அறிவிக்கப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்றுவருகின்றன. இத்தேர்தலில் மீண்டும் சான்டினிஸ்திய அரசே - வெற்றி பெறும் என்பதை அறிந்தஅமெரிக்கா, மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தும் செய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல்களில் இறங்கியுள்ளது. இதன் காரணமாக கிளர்ச்சியாளர்களுடன் தாம் மேற்கொண்ட 19மாத போர் நிறுத்தத்தை கைவிடுவதாக ஜனாதிபதி ஒட்டேகா அறிவித்துள்ளார். – போர் நிறுத்த ஒப்பந்தத்தின்பின் கிளர்ச்சியாளர்களினால் 3000 பேர் கொல்லப்பட்டுள்ளனரென்றும் தொடர்ந்து அப்பாவிப் பொதுமக்கள் மீதும், இராணுவத்தின் மீதும் தெ கொன்ருஸ் நடத்தும் தாக்குதல்களை அரசு சகிக்கப் போவதில்லை என்றும் இந்நடவடிக்கைகளை முறியடிக்க மக்கள் இராணுவம் தனது தாக்குதல்களை ஆரம்பிக்கும் எனவும் ஒட்டேகா கூறியுள்ளார்.

இந்தியா :–

## தேர்தல் சூடு பிடிக்கிறது

இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தல்கள் நவம்பர் மாதம் 22, 24, 26ம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் தேர்தல் சூடுபரவ ஆரம்பித்துவிட்டது. அஸ்ஸாம் தவிர்ந்த 24 மாநிலங்களிலும் 7யூனியன் பிரதேசங்களிலும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. அத்துடன் ஆந்திரா, கர்நாடகம் உத்தர பிரதேசம், கோவா, சிக்கிம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. எதிர்க் கட்சிகளின் கூட்டணியான தேசிய முன்னணிக்கும் இந்திரா காங்கிரசுக்கும் இடையே கடுமையான போட்டி இத்தேர்தலில் மூண்டுள்ளது. வலது சாரி இந்துக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியுடனும் தேர்தல் உடன்பாட்டைமேற் கொண்டுள்ள தேசிய முன்னணி பல இடங்களில் காங்கிரசுக்கு எதிராக ஒரு வேட்பாளரையே நியமிக்கப்போவதாக அறிவித்துள்ளது. காங்கிரசுக்கு தலையிடியை கொடுத்துள்ளது. போர்பாஸ் ஊழலையே முன்னணியாகக் கொண்டு எதிர்கட்சிகளின் பிரசாரம் – அமைந்துள்ளது.

அதேசமயம் இந்திரா காங்கிரஸ் தனது நேசசக்திகளுடன் கூட்டணியமைத்து தனது பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. இந்தியாவின் தொழில் விஞ்ஞான முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி ஆகியன காங்கிரசின் பிரச்சார அம்சங்களாக அமைந்துள்ளன. எதிர் கட்சிகளின் ஒற்றுமைகுறித்து மக்களின் சந்தேகமும் , மக்களின் அடிப்படைப் பிரச்சனை குறித்து சரியான அரசியல் , பொருளாதாரத் திட்டம் எதையும் முன்வைக்காத எதிர்க் கட்சிகளின் தேர்தல் அறிக்கை பிரதமர் பதவி குறித்து எதிர்க்கட்சி தலைவர்களின் அபிலாசைகள் ஆகிய எதிர்க்கட்சிகளின் பலவீனமும் ஒரேயொரு தேசியக் கட்சி காங்கிரசே என்ற பலமும் மீண்டும் இந்திரா காங்கிரஸ் குறைந்த எண்ணிக்கை வெற்றியைப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் தி.மு.க 30 தொகுதிகளிலும், காங்கிரஸ் 29 தொகுதிகளிலும் அ.தி.மு.க. 10 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

அனைவரின் அவதானிப்புக்குரிய பிரதமர் ராஜீவ் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் ராஜீவை எதிர்த்து இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியரும்மகாத்மா காந்தியின் பேரனுமான ராஜ்மோகன் காந்தி எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிடுகிறார். தேர்தல்முடிவுகள் 26 மாலை 5 மணிக்குப் பின் வெளிவர ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* இதர நாட்டுத் தலைவர்களுக்கெதிரான கொலைமுயற்சி, ஆட்சிக் கவிழ்ப்பு ஆகிய சதி முயற்சிகளில் தான் சுதந்திரமாக இயங்குவதற்குரிய அனுமதியை தருமாறு அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ அமெரிக்க அரசை கோரியுள்ளது.

* பாகிஸ்தான் பிரதமரான பெனசிர் புட்டோவின் அரசு தனக்கெதிரான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் மயிரிழையில் தப்பியுள்ளது. எம்பி.க்களை விலைக்கு வாங்குதல், வன்செயல்களைத் தூண்டிவிடல் போன்ற முயற்சிகளின் மூலம் எதிர்கட்சிகள் புட்டோ அரசுக்கு பலத்த நெருக்குவாரத்தைக் கொடுத்துவருகின்றன.

* கம்பூச்சியாவில் இருந்த வியட்நாம்படைகள் வெளியேறியதையடுத்து கம்பூச்சிய அரசுக்கெதிரான தாக்குதல்களை கொலைவெறியன் பொல்பொட்டின் கமர்றூச் அமைப்பு முடுக்கியுள்ளது. இக்கொலைக் கும்பல் நாட்டின் சில பகுதிகளையும் தன்வசமாக்கியுள்ளது. இக்கொலைக்கும்பல்களுக்கு பிரித்தானிய படையினர் பயிற்சி அளித்து வருவது அம்பலமாகியுள்ளது.

* பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சரின் ஆதரவு மிக மோசமான வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. நிதியமைச்சர் லோசன் மற்றும் பிரதமரின்ஆலோசகர் ஆகியோர் பதவி விலகியதுடன் நாட்டின் பணவீக்க அதிகரிப்பு மற்றும்பொருளாதாரச் சீர்கேடு ஆகியவற்றிற்கு பிரதம் தட்சரே காரணம் எனக் குற்றம்சாட்டியுள்ளனர். பிரதமரின் சர்வாதிகார முறையும் கொன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி பிரித்தானியாவின் சரித்திரத்திலேயே மிகக் குறைந்த ஆதரவு கொண்ட பிரதமராக திருமதி தட்சர் அமைந்துள்ளார். அத்துடன் மேற்படி வாக்கெடுப்புகளின்படி 57வீதமானோர் திருமதி தட்சர் உடனடியாக பதவி விலகவேண்டுமெனக் கருதுகின்றனர். அதேசமயம் 50வீதத்துக்கும் மேற்பட்டோர் எதிர்க்கட்சியாகிய தொழிற்கட்சிக்கு வாக்களிக்கத்தயாராக உள்ளனர்.


* ஸ்பெயினில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் பிலிப் கொன்சலேசின் தலைமையிலான சோசலிசக் கட்சி வெற்றிபெற்று மூன்றுவது தடவையாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. சென்றமுறையைவிட 8ஆசனங்கள் குறைவாகப்பெற்ற சோசலிஸ்டுக்கள் இம்முறை 8இலட்சம் வாக்குகளையும் இழந்துள்ளனர். தேவையான அறுதிப் பெரும்பான்மையைவிட 1 ஆசனத்தை அதிகமாக சோசலிஸ்டுக்கள் பெற்றிக்கும்அே அதேசமயம் வலதுசாரி எதிர்க்கட்சிகளும் ஈழுஇழப்பாளர்களாகவே கருதப்படுகின்றனர். ஆனல் கடந்த தடவையைவிட 10 ஆசனங்கள் அதிகமாகபெற்ற கம்யூனிஸ்டுகளே இத்தேர்தலின் வெற்றியாளர்களாகக் கருதப்படுகின்றனர். கடந்த தடவைகளில் சோசலிஸ்டுகளுக்கு வாக்களித்த இடதுசாரிகளும், தொழிலாளர்களும் இத்தடவை கம்யூனிஸ்டுகளுக்கு வாக்களித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாடும் நடப்பும்.



**குமார்**



நாட்டிலே நடக்கின்ற பலசம்பவங்கள் எமக்கு தலையைசுற்றவைக்கின்றன. மக்களின்காதுகளிலே பூ வைக்கும்வேலையை பலரும் மாறி மாறிச் செய்ய ஆரம்பித்து விட்டனர். ஆளும்அரசிலிருந்து தமக்குத்தாமேஅறிவுஜீவி என லேபல் ஒட்டியவர்-வரை வெகுதாராளமாகவே- இந்த 'றீல்விடும்' வேலையை- செய்கிறார்கள்.

சிறீலங்கா அரசாங்கம் நாட்டின் அமைதியைக் கொண்டுவர தான் முயல்வதாகவும்தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தான் தீர்க்க முயல்வதாகவும் அறிக்கைக்கு மேல் அறிக்கை விடுகிறது. சர்வகட்சி மாநாடுசந்

www.tamilarangam.net

திப்புக்கள் 'பேச்சுவார்த்தைகள் என்றெல்லாம் அட்டகாசம
மாய் வெட்டி முழங்கிற்று. ஆனால் அதே சமயம் ஜனநாயக
வழியில் அரசியல் நடத்துற அரசியல்வாதிகளின் உயிர்களுக்கு
இந்த அரசு உத்தரவாதம் கொடுக்கவில்லை. அமிர்தலிங்கம்
யோகேஸ்வரன் ஆகியோர்களை 'கொன்றவர்கள் புலிகள்தான்
என்பதற்கான சகல ஆதாரங்களும் வெளியாகியும் அரசு அது
பற்றி அலட்டிக் கொள்ளவுமில்லை- அம்பலப்படுத்தவுமில்லை.
சட்டரீதியான விசாரணைகளைத் துரிதப்படுத்தவுமில்லை. மா
றாக மேற்படி கொலைகளுடன் புலிகளைச் சம்பந்தப்படுத்தி,
செய்தி வெளியிடவேண்டாம் என்று சர்வ அதிகாரமும் பொரு
ந்திய உத்தரவை செய்தியாளர்களுக்கு இட்டு புலிகளை அரசு
காப்பாற்றியுள்ளது. அதுமாத்திரமல்ல இக்கட்டான ஒரு சூழ்
நிலையில் நாட்டைவிட்டு வெளியேறாமல் மக்களுக்கு சேவை -
செய்ய முனைந்து அரசு யந்திரத்தை ஓரளவாவது இயக்கிக்
கொண்டிருந்த அரச அதிபர் பஞ்சலிங்கம், மேலதிக அர
சாங்க அதிபர் இராமநாதன் போன்ற தன்னுடைய உயர்
ஊழியர்கள் மிலேச்சத்தனமாக புலிகளால் சுட்டுக் கொல்லப்
பட்டதைக் கூட இந்த அரசு கண்டுகொள்ளவில்லை. நாட்டின்
ஒரு பகுதியில் நிர்வாக யந்திரத்தை நாசமாக்கி அரச
ஊழியர்களை வேலைக்குப் போகவிடாமல் மக்களை எல்லைய
ற்ற துன்பத்துக்குள்ளாக்கும் புலிகளின் செயலை அரசு கண்டிக்-
காமல் அரசு தட்டிக் கொடுத்து ஐந்து நட்சத்திர விடுதிக
ளில் சகலவசதிகளையும் பாதுகாப்பையும் கொடுத்து வைத்
திருப்பதையும் ஆயுதங்களையும் பெருந்தொகை பணத்தையும்,
வழங்கி தன்னுடைய பிரச்சார சாதனங்களையும் பயன்படுத்து
ம் வசதிகளையும் வழங்கி கொண்டு... பிரச்சனைகளை -
தான் தீர்க்க முயல்வதாகவும் தம்பட்டமடிப்பது எப்படிப்பட்
டபெரிய பூவை காதிலே வைக்கிற வேலை பார்த்தீர்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கம் தான் இப்படி என்றால் புலிகள் அதற்கு மேலே பெரிய பூணாகச் சுற்றுகிறார்கள். தமிழீழத் தாகம் எடுத்துத் திரிந்தவர்கள் அந்தத் தாகத்தை தணிக்க பலரின் இரத்தத்-தைக் குடித்தவர்கள் திடீரென தாகம் தணிந்தவர்களாய் சிறீ லங்கா அரசுக்கெதிரான 17 வருட ஆயுதப் போராட்டத்-தைக் கைவிடுவதாக கூறி சிங்கள அரசிடம் சரணாகதி அடைந்துவிட்டு.....பணத்துக்கும், ஆயுதத்துக்கும், ஐந்து நட்சத்திர வசதிகளுக்கும் போராட்டத்தை அடமானம் வைத்துவிட்டு இன்னும் தங்களை 'விடுதலை' புலிகளாக வெளிநாட்டில் பீரங்கி வெடித்து தீர் விடுகிறார்கள்.

அதுமாத்திரமல்ல பிரேமதாசாவின் 'தாசர்'களாக மாறிவிட்டபுலிகள் நேற்றுவரை மாகாணசபையை ஏற்றுக்கொண்டதற்காக துரோகிகள் என்றார்கள் இன்று தாமும் அம்முறையைஏற்கத் தயார் என அறிக்கைவிடுகிறார்கள். அது துரோகம் என்றால் இதற்குப் பெயர் என்ன? அத்துடன் தமிழ் மக்களின்பாதுகாப்பை தமிழ் இராணுவமே செய்யவேண்டும்மென மாகாண சபை அரசு சொல்ல இல்லை இல்லை அது கூடாது சிறீலங்-காஅரச படையுடன் சேர்ந்து நாங்கள் பார்த்துக் கொள்வோம் என சிங்களப்படைகளுக்கு புலிகள் செங்கம்பள வரவேற்பு கொடுக்கும் துரோகம் செய்ய இந்த துரோகங்களையெல்லாம் வெளிநாடுகளில் கூலிப்பட்டாளங்கள் அரசியல் தந்திரம் என்று காதிலே பூ சுற்றுகிறார்கள்

www.tamilarangam.net

இந்தியப் படைகள் வெளியேறினாலும் நாம் எதிர் அமைப்புக்க ளை 'தாக்கமாட்டோம் என்று புலிகளின் அரசியல் வித்தகர், பசுத்தோலை போர்த்து இலங்கையிலே காதிலே பூ சுற்ற நோர்வே - ஒஸ்லோவிலே அடியாட்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களுக்கெதிராக காடைத்தனத்தை காட்டியிருக்கிறார் கள். பிரான்சிலே ஆள்கடத்தல் செய்திருக்கிறார்கள். இந்தப்பு லிகள் தான் புல்லைத் தின்போமென்று காதிலே பூ சுற்றுகி-றார்கள்.

இவைதான் இப்படியென்றால் தங்களுக்குத் தாங்களே அறிவுஜீவி கள் என்று லேபல் ஒட்டிக்கொண்டிருந்த எங்களை 'ஐரோப் பிய தமிழ் அறிவு ஜீவிகள்' பெரிய பெரிய பூக்களுடன் காது களை தேடி அலைகிறார்கள். இந்த அறிவு ஜீவிகளை அறிமுகப் படுத்த சுலபமான வழி ரஞ்சகுமார்-கோளாறுபதிகம் என்ற சிறுகதையில் குறிப்பிடுறமாதிரி 'அரசியலிருந்து ஒதுங்கியவர்கள் அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் கடைசியில் கலை-இலக்கியம்என் றாவதாவது ஒரு வழிக்கு போவதுதானே' என்பது போல இந்த அறிவுஜீவிகள் இன்னும் அரசியல் ஆசையிலிருந்து விடுபட முடியாதவர்களாய் ஏதோ ஒரு மடம் கட்டிக்கொண்டு இப் போது அராஜக எதிர்ப்பு பிரசங்கங்களில் இறங்கி பூ வைக் கத் தொடங்கி யுள்ளனர். புலிகளின் சர்வதேச பயங்கரவா தஎச்சரிப்புகளுக்குப் பயந்து அராஜகத்துடன் புலிகளை இவர் கள் தொடர்புபடுத்துவதில்லை. பஞ்சலிங்கத்தை புலிகளின்-- தோட்டாக்கள் துளைத்த அராஜகத்தை இவர்கள் பேசமாட் டார்கள், டாக்டர் ரஜனி திரணகம எனும் வீரமான பெண்ம ணியை கொன்ற கொலையாளிகளை அறிந்து காட்ட இவர்கள்- முன்வரமாட்டார்கள். சிறுவர்களை வற்புறுத்தி காட்டுக்குப்புலி கள் இராணுவப் பயிற்சிக்கு கடத்திச் செல்வதுபற்றி மூச்சு விடமாட்டார்கள். படைகளுக்கு ஆத்திரமூட்டி அப்பாவி மக்க

www.tamilarangam.net

ளைச் பலியாக்குவதைப்பற்றி மூச்சுவிடமாட்டார்கள். வர்த்த கர்களை புலிகள் கடத்தி இலட்சக்கணக்கில் பணம்பறிப்பதைப் பற்றி வாயே திறக்கமாட்டார்கள். ஆனால் ஈ.பி.ஆர்.எல். எவ் அராஜகம் செய்யுது என்று நாக்கிலே நரம்பில்லாமல் இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் சொல்லி காதிலே பூ வைச்சு அப்பாவி மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிச்சு தங்கட ஐரோப்பிய சுகவாழ்க்கையை பாதுகாக்கப் போயிருவினம்.

இதில இன்னுமொரு விசயம் என்னண்டால் இந்த அராஜகம் என்டு சொல்லி அழுறவையில பலர் சவுக்குத்தோப்புகளுக்கும் புதைகுழிகளுக்கும் சாட்சியாக கைகட்டி வாய்பொத்தி, மௌனமாய் ஆதரவு வழங்கியிருந்தவர்கள். அவர்கள்தான் இப்பஇப்படி காதில பூ வைக்க வெளிக்கிட்டிருக்கினம்.

இப்படியெல்லாம் மாறி மாறி பூ வைக்க, எங்கட சனத்துக்கு இரண்டு காது போதுமா? இல் லைத்தானே.

<u>பிந்திய செய்தி</u>:

**ஜே.வி.பி. தலைவர்கள் கொல்லப்பட்டனர் ?**

**கடந்த ஞாயிற்றுக் கிழமை (12.11.89) கண்டியை அண்மித்த பகுதியொன்றை சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்தபோது ஜே.வி.பி யின் தலைவர் றோகணவிஜேவீரா கைதுசெய்யப்பட்டதாகவும் பின்னர் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டபின் இவர் தப்பி யோட முற்பட்டபோது சுட்டுக்கொல்லப்பட்டு இவர் உடல் உடனேயே தகனம் செய்யப்பட்டதாகவும் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து ஜே.வி.பி யின் தலைவர்களான உபதிஸ்ஸ கமநாயக்கா உட்படமேலும் ஆறு பேரும் மேற்கூறிய வகையிலேயே கொல்லப்பட்ட தாயும் அரசு அறிவித்துள்ளது. ஆனால் இலண்டன் பிரதிநிதி இதை நிராகரித்துள்ளார்.**

www.tamilarangam.net

**EPIC**
52, customs road
trincomallee
sri lanka .

**EPIC**
boite no·69
7, rue racine
95140 - garges
france·

**EPIC**
b·m box -1738
london w.c.i.n 3xx
u·k·

**E P I C**

**EPIC**
hüsing str 2
5840 · schwerté
w·germany·

**EPIC**
p·o box - 6800
agincourt
ont , canada·

**EPIC**
post bag - 5551
madrass - 600094
india .

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

**EELAM PEOPLES REVOLUTIONARY LIBERATION FRONT**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# EPIC

வெளியீடு:
ஈழ மக்கள் செய்தி தொடர்பு நிலையம்
(பிரான்ஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்